பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 16 புதன்கிழமை (01.12.2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 05

# குருநகர் கோஷ்டி மோதல் 2ஆவது நாளாகவும் நீடிப்பு; நிலைமையைக் கட்டுப்படுத்த இரவு நேர ஊரடங்கு!

குருநகர்,டிசெ.1

குருநகர்-திருநகர் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் குழுக்களிடையில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட கோஷ்டி மோதல் நேற்று இரண்டாவது நாளாகவும் நீடித்தது. இதனால், அப்பகுதிகளில் நேற்று முழுநாளும் பதற்றம் நிலவியதுடன், நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இரவு நேர ஊரடங்கும் பிறப்பிக்கப் பட்டது.

குருநகர் அண்ணா சிலையடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் மூவர் படுகாயமடைந்திருந்தனர். இதனை அடுத்து நேற்று முன்தினமிரவு வரை அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.

அத்துடன், அன்றையதினம் இரவு குருநகர் இராஜசிங்கம் வீதியில், யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடுகள் பலவும் சேதமாக்கப்பட்டதுடன், குடிசை வீடுகளுக்கு டைனமற் வீசப்பட்டதில் அவை எரிந்து நாசமாகின.

இதனை அடுத்து, அப்பகுதிக்கு விரைந்த பொலீஸாரும், இராணுவத்தினரும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை, குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதிச் சந்தி, திருநகர் இராஜசிங்கம் வீதிச் சந்தி ஆகிய இடங்களில் பொலீஸார் காவலில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன், ஜீப்பில் ரோந்து சென்ற பொலீஸார் வீதிகளில் குழுமி நின்ற பொது மக்களை குவிந்து நிற்காமல் தத்தமது வீடுகளுக்குச் செல்லுமாறும் - அமைதியை நிலைநாட்டத் தாம் நடவடிக்கை எடுத்துவரு வதாகவும் - அறிவித்தனர்.

இதற்கிடையில், நேற்றுப்பகல் வேளை சற்றுத்தணிந்து காணப்பட்ட கோஷ்டி மோதல் பிற்பகலளவில் மீண்டும் பெரியளவில் வெடித்தது.

குருநகர், சவக்காலைச் சந்தி, தொடர்மாடி, திருநகர், யாழ். முனீஸ்வரன் வீதி, யாழ். பிரதான வீதி ஆகிய இடங்களில் திரண்ட இரண்டு கோஷ்டிகளும் தமக்கிடையில் மோதிக்கொண்டன. கத்தி, வாள், குண்டாந்தடி, சைக்கிள் செயின், டைமைற் என்பன இந்த மோதலில் பயன்படுத்தப்பட்டன.

இந்த மோதல்களில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள் என 20 இற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு இலக்காகினர். அத்துடன், திருநகர்ப்பகுதியில் உள்ள 10 இற்கும் அதிகமான வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. இதனை அடுத்து அப்பகுதிகளில் படையினரும் கலகம் அடக்கும் பொலீஸாரும் குவிக்கப்பட்டனர். எனினும்,



தலையில் படுகாயமடைந்தவர்களில் ஒருவர் வைத்தியசாலையில்... (படம் பிரபா)

மோதலில் ஈடுபட்டவர்களின் தாக்குதல்கள் எல்லை மீறிப்போகவே படையினர் வானத்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

## கோஷ்டி மோதலில் படுகாயமடைந்தோர்

குருநகர் டிசெ.1

குருநகர், திருநகர் ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற மோதலில் 20 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இவர்களில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

செபஸ்ரியன் றமேஸ் (வயது 31-குருநகர்), எம்.அருள் (வயது44-குருநகர்), அன்ரனி ஜெகன் (வயது 24-குருநகர்), கிறிஸ்துராசா அனிற்றா (வயது 18-குருநகர்), செபஸ்ரியன் ஜெகதீஸ் (வயது24-குருநகர்), செபஸ்ரியாம் பிள்ளை ஜோண்சன் (வயது 24-திருநகர்), மாதன் முத்தன் (வயது 60-திருநகர்).(எ-7-12-51)

## கொக்குவிலிலும் கோஷ்டி மோதல்!

யாழ்ப்பாணம், டிசெ.1

இருவேறு மோதல் சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் திருநெல்வேலி ஆலடிச்சந்திப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத இளைஞர் கும்பலினால்

(16ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாவின் கேள்விக்கு என்ன பதில்?

## அரசிடம் கேட்கின்றது ஐ.தே.கட்சி!

## இனிமேலும் சாக்குப்போக்குச் சொல்லி தட்டிக்கழிக்கக் கூடாது என வலியுறுத்தல்

கொழும்பு, டிசெம்பர் 1

**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் தின உரையில் குறிப்பிட்டதற்கமைய மாட்டின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய தனது கொள்கை நிலைப்பாட்டை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தெளிவுபடுத்த வேண்டும்.**

**ஜனாதிபதியின் கொள்கைப்படியா அல்லது ஜே.வி.பியின் கொள்கைப்படியா சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப் படவேண்டும் என்பதை அரசு இப்போது தீர்மானித்தாக வேண்டும்.**

**சாக்குப்போக்குக் கூறி தனக்குள்ள பொறுப்பை அரசு தட்டிக்கழிக்கக் கூடாது. அரசு அதற்குரிய பதிலைக் கூறியேயாக வேண்டும்.**

**- இப்படி வலியுறுத்தியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.**

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாட்டின்போது அக்கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

தேசியப் பிரச்சினை தொடர்பாகத் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் கொள்கைகளை, தீர்வுகளை பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென்று புலிகளின் தலைவர் தனது மாவீரர்தின உரையில் கேட்டுள்ளார் என்று குறிப்பிட்ட பேராசிரியர் பீரிஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனாலும் இப்போது ஆட்சியிலுள்ளவர்களின் கொள்கை என்னவென்பதுதான் கேள்வியென்றும் சொன்னார். அவர் மேலும் கூறியதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதற்றம் தொடர்கிறது; நேற்றிரவும் ஊரடங்கு நடைமுறையில்!

திருகோணமலை, டிசெ.1

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் ஏற்பட்ட பதற்றம் நேற்றும் தொடர்ந்தது. மக்கள் ஒருவித பீதியுடனேயே காணப்படுகின்றனர். நேற்றுமாலை 5 மணிமுதல் இன்றுகாலை 6 மணிவரைக்கும் மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நேற்று முன்தினம் மாலை பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்றுக்காலையே நீக்கப்பட்டது.

நேற்றுக் காலையிலேயே திருகோணமலை 'பஜாரில்' கடைகள் எவையும் திறந்திருக்கவில்லை. ஏனைய பகுதிகளில் தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான கடைகள் திறந்திருந்தன. நண்பகலின்பின்னர் அவையும் மூடப்பட்டன. ஜே.வி.பியினர் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் போகின்றனர் என்ற வதந்தி பரவியதால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால், அத்தகைய ஹர்த்தால் அழைப்பு எவையும் விடுக்கப்படவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு பிறப்பிக்கப் பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்றுக்காலை 6.00 மணியுடன் தளர்த்தப்பட்டது. ஆனால், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் என்பன இயங்கவில்லை. பாடசாலைகளில் நேற்று நடைபெறவிருந்த மூன்றாந் தவணைப் பரீட்சை பிற்போடப்பட்டது. நகரில் சனநடமாட்டம் மிகமிகக் குறைவாகவே காணப்பட்டது. வாகனப் போக்குவரத்தும் குறைந்திருந்தது. இதனால் நகரம் பெருமளவில் அமைதியாகவே காணப்பட்டது. மக்கள் முகங்களில் பீதி தென்பட்டது.

நிலைமை இவ்வாறு இருந்த போதும், ஜி.சீ.ஈ. உயர்தரத் தகைமையுடன் ஆசிரியர் சேவைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் குழப்பங்களை ஏற்படுத்தி இலாபமடைய 3 ஆம் தரப்பு ஒன்று முயற்சி!

### படைகளின் சிரேஷ்ட அதிகாரி தயா சந்தகிரி குற்றச்சாட்டு

திருகோணமலை, டிசெ.1

திருகோணமலையில் குழப்பங்களை ஏற்படுத்தி லாபம் தேடுவதற்கு மூன்றாம் தரப்பு ஒன்று முயற்சிக்கிறது என்று குற்றஞ் சாட்டினார் கடற்படைத் தளபதியும், படைகளின் சிரேஷ்ட அதிகாரியுமான ரியர் அட்மிரல் தயா சந்தகிரி.

திருமலை கடற்படைத்தள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இப்படிக் கூறினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பின்போது மதகுருமாரும் படையதிகாரிகளும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய தலைமுறையின் இதயம் வெல்லும் இன்றைய நாளிதழ்

# தென்னிலங்கையின் அரசியல்வாதிகளுக்கு புலி அடிக்க முன்னரே கிலி பிடித்துவிட்டது!

## நாடாளுமன்றில் நேற்று சம்பந்தன் எம்.பி. சூடு!

கொழும்பு, டிசெ.1

''புலி அடிக்கும் முன்னரே தென்பகுதி அரசியல்வாதிகளுக்கு கிலி பிடித்து விட்டது. அதனால்தான் கோமாளிகள் போல் அவர்கள் பிதற்றுகின்றனர். இந்தச் சபைக்கு அவர்கள் இடம்மாறி வந்து விட்டனர்.

''வடக்கு - கிழக்கு மாகாணம் பிரிந்து ஒரு தனிநாடு உருவாகுமேயானால் அதற்கான முழுப்பொறுப்பையும் இந்த அரசும், தென்பகுதி அரசியல் வாதிகளுமே ஏற்க வேண்டும்''.

- இப்படி நாடாளுமன்றத்தில் சாட்டை அடி கொடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி.

நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி, பிரதமர், பிரதமநீதியரசர் மற்றும் நாடாளுமன்றம் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சபையில் அவர் தொடர்ந்து பேசும்போது, மாவீரர் தினத்தன்று தேசியத் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையைத் தொட்டுக் காட்டினார்.

இதனை ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி என்பனவற்றின் உறுப்பினர்கள் ஆட்சேபனை கிளப்பி இடையூறு செய்தனர்.

சில நிமிட சர்ச்சையின் பின் சம்பந்தன் எம்.பி. தொடர்ந்து உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது:-

''மூன்று வருடம் யுத்த நிறுத்தம். ஆறு மாதம் பேச்சு. அவற்றால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு அவ்வளவு எளிதாகத் தீர்வு கண்டுவிடமுடியாது.

அதை நாங்கள் நன்கு அறிவோம். அதனால் தான் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைக் கேட்கின்றோம்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகள் தமது ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர்.

அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும்படி நாம் கட்டாயப்படுத்தவில்லை. புலிகளின் ஆலோசனைகள் தொடர்பில் தென்னிலங்கையில் முரண்பாடுகள் காணப்படலாம். அவற்றைப் பேச்சு மேசையில் பேசித் தீர்க்க முடியும். அதனால்தான் நிரந்தர தீர்வுக்கு முன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும்படி வலியுறுத்துகின்றோம்.

சமாதானப் பேச்சுக்கும், நிரந்தரத் தீர்வுக்கும் இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகளே அத்திபாரமாக அமையும்.

ஆனால், தென்பகுதி பேரினவாத அரசியல்வாதிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்குத் தவறான அர்த்தம் கொடுத்து, தமிழர்கள் தனிநாடு கேட்கிறார்கள் என துவேசத்தைக் கிளப்பி விட்டனர்.

இனப்பிரச்சினை தொடர்பாக முன்னாள் பிரதமர்களான டட்லி, பண்டாரநாயக்க ஆகியோருடன் தந்தை செல்வா ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார்.

ஆனால், உங்களைப் போன்ற பேரினவாதிகளே அப்போதும் இந்தத் துவேசத்தைத் தூண்டிவிட்டு, நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தினர்.

இதனால்தான் விரக்தியின் விளிம்புக்குச் சென்ற தந்தை செல்வா, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் பிரகடனப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தந்தை செல்வாவும், தேசியத் தலைவர் பிரபாகரனும் ஒரே நோக்கத்தைக் கொண்டவர்கள் தான். ஆனால், இடையில் பிரபாகரன் தூக்கிய ஆயுதம்தான் சற்று மாறுதலானது.

ஆனால், இரு பெரும் தலைவர்களின் பின்னும் மக்கள் அணிவகுத்து நின்றனர்.

பல்லாயிரம் உயிர்களைத் தியாகம் செய்த பின்னரும், நாம் இன்னும் சமாதானத்தை விரும்புகின்றோம். ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றுபட்டு சுய உரிமைகளுடன் வாழவே விரும்புகின்றோம். நிரந்தரமான ஒரு தீர்வு காண்பதற்கு முன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கமும், பேராசையும்.

உங்களைப் போன்ற பேரினவாதிகளினால் 1950 களின் பின் 1983 களில் ஏற்பட்ட அனர்த்தங்களை மறந்துவிட்டு நீங்கள் பேசக் கூடாது.

அப்படியான ஒரு நிலையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்பதே பேரினவாதிகளின் நோக்கம்போல் தெரிகின்றது.

நாங்கள் நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை. ஐக்கியத்துடன் வாழவே விரும்புகின்றோம். சமஷ்டி முறையினை ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால், நீங்களோ எங்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளிவிட்டிருக்கின்றீர்கள்.

இந்த நாடு இரண்டாகப் பிரிய நேரிட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் இந்த அரசும், பேரினவாத சக்திகளுமே ஏற்கவேண்டும். இதைத்தான் எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரனும் வெளிப்படையாகக் கூறியுள்ளார். - என இரா.சம்பந்தன் எம்.பி. சபையில் தெரிவித்தார்.

## மூத்த எழுத்தாளர் 'புத்தொளி' காலமானார்



மூத்த எழுத்தாளரும் சமூகத் தொண்டனுமான 'புத்தொளி' ந. சிவபாதம் நேற்றுக் காலமானார். 73 வயதான இவர், சுமார் பத்து நாள்களாக யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

ஆசிரியராக, அதிபராகப் பணிபுரிந்த இவர், தமது இளமையிலேயே எழுதத் தொடங்கினார். சுதந்திரன், வீரகேசரி, சிந்தாமணி உட்படப் பல ஈழத்துப் பத்திரிகைகளில் சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள் என்று நிறைய எழுதியவர். இவர் ஒரு பத்திரிகையாளருமாவார்.

சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கிய 'புத்தொளி', மொத்தம் பதினாறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் விவரங்களைத் தொகுத்து நூல் ஒன்றை வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

இவர் நூல்களைச் சேகரிப்பதில் மிகுந்த ஆர்வங்கொண்டவராக விளங்கியதால், அவரது இல்லத்தில் பெரிய நூலகம் ஒன்றை வைத்திருந்தார். இலக்கியவாதிகள் பலரும் தமக்குத் தேவையான குறிப்புக்களைப் பெறுவதற்கு இவரது நூலகத்திற்கே செல்வதுண்டு.

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட ந.சிவபாதம், ஆனைக்கோட்டையில் வசித்து வந்தார். (அ-15)

# மன்னாரிலிருந்து வந்த இளைஞர்கள் நால்வர் மீது திருமலையில் தாக்குதல்!

## கொலைச் சம்பவத்துக்குப் பதிலடியா?

திருகோணமலை, டிசெ.1

மன்னாரிலிருந்து நேற்று நண்பகல் திருகோணமலைக்கு வந்த நான்கு தமிழ் இளைஞர்கள் சில சிங்கள இளைஞர்களால் அழைத்துச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார்கள். பொலீஸார் விரைந்து அவர்களை மீட்டனர்.

நேற்று முன்தினம் கண்டியிலிருந்து வந்த சிங்கள இளைஞர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டதற்குப் பதிலடி போன்று தோன்றும் இந்தத் தாக்குதலால் பகல் 11.30 மணியளவில் திருகோணமலை நகரமே அல்லோலகல்லோலப் பட்டது.

நகரில் உள்ள மணிக்கூண்டுக்கோபுரத் தடியில் வைத்தே தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டனர். இதனால் சந்தைக்கு வந்திருந்த பொது மக்கள் பீதியடைந்து சிதறி ஓடினர். எங்கும் பதற்றம் பரவியது.

நண்பகலளவில் மன்னாரிலிருந்துவந்த நான்கு இளைஞர்கள் பஸ் நிலையத்தில் இறங்கியுள்ளனர். தாம் செல்லவேண்டிய 10ஆம் நம்பர் என்ற தமிழர் பகுதிக்குச் செல்ல வழிதெரியாததால், 'கொரியா' என்றழைக்கப்படும் சிங்களப் பகுதியில் அவர்கள் வழிவிசாரித்துள்ளனர்.

அங்கிருந்த சிங்கள இளைஞர்கள் சிலர் அவர்களுக்குத் தாம் வழிகாட்டுகிறார்கள் என்று கூறி அழைத்துச் சென்று மணிக்கூண்டுக்கோபுரத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஏகாம்பரம் வீதியில் வைத்துச் சரமாரியாகத் தாக்கினர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அடிவாங்கிய தமிழ் இளைஞர்கள் வழி தெரியாது சிங்களவர்களின் பிரதேசத்தினுள்ளேயே ஓடியுள்ளனர். இதனைக் கண்டுவிட்ட பொலீஸார் உடன் நடவடிக்கை எடுத்து அவர்களை மீட்டனர்.

இச்சம்பவத்தினால் சந்தையிலும், கடைகளிலும் பொருள்களை வாங்கக் கூடியிருந்த மக்கள், தமது பொருள்களை எடுத்ததும் எடுக்காததுமாகத் தலைதெறிக்க ஓடினர்.

இந்தச் சம்பவத்தால் திருக்கடலூர், சிறிமாபுர போன்ற பகுதிகளில் பதற்றம் பரவியுள்ளது. சம்பவம் இடம்பெற்றதும் கொந்தளித்த மக்கள் நூற்றுக்கணக்கில் வீதிகளில் கூடினர்.

எனினும், தொடர் அசம்பாவிதங்கள் எவையும் உடனடியாக இடம்பெறவில்லை. (எ-க)

# திருமலையில் சுமுக நிலையை உருவாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்

## எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி அவசர கோரிக்கை

திருகோணமலையில் சுமுக நிலையைத் தோற்றுவிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். சமாதான அரும்புகள் முளைவிட்டுள்ள இந்தச் சமயத்தில், இவ்வாறான பாரதூரமான சம்பவங்கள் இடம்பெறுவது வேதனைக் குரிய தொன்றாகும்.

-இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

இது விடயமாக, ஐ.தே.கட்சி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

அண்மையில் திருகோணமலையிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் இடம்பெற்ற கவலைக்குரிய சம்பவங்கள் தொடர்பாக ஐ.தே.கட்சி முக்கிய கவனம் செலுத்திவருவதோடு, அத்தகைய செயல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்தமை தொடர்பாக அரசுக்குத் தனது கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தால் பாதிப்படைந்துள்ள அப்பிரதேசத்தில் வாழும் சகல மக்களுக்கும் ஐ.தே.கட்சி தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இதுவரையிலும் கையாளப்பட்டுவந்துள்ள நடைமுறை யாதெனில், ஒவ்வோர் ஆண்டிலும் நவம்பர் 26, 27 போன்ற எழுச்சிமிகுந்த தினங்கள் வரும் சந்தர்ப்பங்களில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கு முக்கியமாக மோதல்கள் இடம்பெறக்கூடிய பிரதேங்களில் சட்டமும், சமாதானமும் பாதுகாக்கப்படும் பொறுப்பைப் பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலீஸாரிடம் வழங்குவது வழமையாகும். ஆனால், இத்தகைய ஒன்று இம்முறை இடம் பெற்றதாகத் தென்படவில்லை.

அத்துடன், இது தொடர்பாக கூட்டுமுன்னணி அரசின் பங்காளி ஒருவர் தலையிட்டுள்ளதும் தெளிவாகத் தெரிகிறது. முக்கியமாக அது வடக்கு - கிழக்கில் பெரும்பான்மை இன மக்கள் வாழும் பிரதேசங்களுக்கும் கடுமையான அச்சுறுத்தலாகியுள்ளது.

திருகோணமலை மற்றும் அதைச்சூழவும் நடந்துள்ள சம்பவங்களை முன்கூட்டியே உணர்ந்து மற்றும் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அச் சம்பவங்களைத் தவிர்த்திருக்க வாய்ப்பிருந்துள்ளது. இனவாத உணர்வலைகளை எழுப்பி, தமக்கு ஆதரவான சில பிரிவினரைத் திருப்திப்படுத்தும் நோக்கில் அர்த்தமில்லாத வீரத்தனம் ஒன்றை உருவகித்துக் காட்டி ஜே.வி.பி. ஆரம்பித்துள்ள குழப்பம், பாதுகாப்புப் படைகளோடு மோதக்கூடிய அளவுக்கு விரிவடைந்துள்ளது.

பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலீஸாருக்கு ஏற்பட்டுள்ள நிலைப்பாடுகளைக் கட்டுப்படுத்த சிரமமேற்பட்டதற்கு அரசின் பங்காளிகளான ஜே.வி.பி. இவ்வாறு அதில் ஈடுபட்டுள்ளமையே காரணமாகியுள்ளது.

இக் காரணத்தை முன்னிட்டே திருகோணமலை மற்றும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களில் வசிக்கும் சாதாரண பொதுமக்களின் அன்றாட வாழ்வு முடக்கப்பட்டு, மீண்டும் அவர்கள் அகதிகளாக மாறும் நிலை உருவாகியுள்ளது. ஒருவர் மரணமடைந்துள்ளதோடு பலருக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சமாதான அரும்புகள் தோன்ற ஆரம்பித்துள்ள நாடொன்றில் இத்தகைய பாரதூரமான சம்பவமொன்றைச் செவிமடுக்க நேர்ந்துள்ளமை மிகுந்த வேதனைக்குரியதாகும்.

இப் பிரதேசங்களில் மக்களின் வாழ்க்கை முடக்கப்படுவதற்கும் மற்றும் சொத்துக்களும் மனித உயிர்களும் இழக்கப்படுவதற்குக் காரணமான இந்தச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்படுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நாட்டினதும் மக்களது பாதுகாப்புக்குப் பொறுப்பாகச் செயலாற்றும் ஜனாதிபதியிடமும் மற்றும் ஜே.வி.பி. உள்ளிட்ட கூட்டு முன்னணி அரசிடமும் ஐ.தே. கட்சி பெரிதும் வேண்டிக் கொள்கிறது - என்று அதில் உள்ளது. (எ)

# திருமலை- புளியங்குளத்தில் சடலம் மீட்பு!

திருகோணமலை, டிசெ.1

திருகோணமலை, அலஸ்தோட்டம், துவரங்காடு ஆகியவற்றுக்கு அருகில் உள்ள புளியங்குளம் பகுதியில் இருக்கும் களப்பு ஒன்றில் இருந்து 40 வயது மதிக்கத்தக்க சிங்களவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. அவரது சடலத்தின் தலையில் அடிகாயங்கள் காணப்பட்டன என்றும், கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

தமித் என்பவரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது. உல்லாசப் பிரயாணிகளுககு வழிகாட்டியாக இவர் கண்டியிலிருந்து வந்தார் என்றும் கூறப்படுகின்றது.

அடித்துக் கொல்லப்பட்ட பின்னர் இவர் களப்பினுள் தூக்கி வீசப்பட்டிருக்கலாம் என்று உப்புவெளிப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

நிலாவெளியில் உள்ள ஹோட்டல் ஒன்றிலேயே இவர் தங்கியிருந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை புளியங்குளம் பகுதிக்கு மதுபானம் வாங்குவதற்குச்சென்றுள்ளார். இவர் சென்ற வாகனத்தை வழிமறித்த சிலர், இவருடன் சென்ற தமிழ் இளைஞர்களைத் துரத்திவிட்டு இவரைத் தாக்கியுள்ளனர். இவர் அணிந்திருந்த ஆபரணங்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர் என்று பொலீஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் தலையில் காயங்களுடன் நேற்று சடலத்தை மீட்ட உப்புவெளிப் பொலீஸார், அதனைப் பொதுவைத்தியசாலை பிரேத அறையில் வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். [illegible] தார் எனக் கூற[illegible] பகுதியில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

### கடல் கொந்தளிப்பால்

# பொலிகண்டி கடலில் படகு கவிழ்ந்ததில் இரண்டு மீனவர்களுக்குப் பலத்த காயம்!

கரவெட்டி டிசெ.1

கடல் கொந்தளிப்பினால் படகு தூக்கி எறியப்பட்டு கவிழ்ந்ததில் அதில் பயணஞ்செய்த மீனவர் இருவர் கடலில் வீழ்ந்து பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். இந்தச் சம்பவம், நேற்றுக் காலை 6 மணியளவில் வடமராட்சி பொலிகண்டி கடல்பரப்பில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு தொழிலுக்குச் சென்றமீனவர்கள், நேற்று அதிகாலை தொழில் முடிந்து கரைதிரும்பியபோது கடலில் திடீரெனக் கொந்தளிப்பு ஏற்பட்டது என்றும் -

இதனால் தூக்கி எறியப்பட்ட படகு உடனடியாகக் கவிழ்ந்தது என்றும் - கூறப்பட்டது.

படகில் பயணம் செய்தவர்களில் பலாலியைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை இருதயநாதன் (வயது 28) என்ற குடும்பஸ்தர் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வல்வை மாவட்ட வைத்தியசாலையிலும் பொலிகண்டியைச் சேர்ந்த அன்ரன் மரியதாஸ் (வயது-33) என்பவர் வயிற்றுப் பகுதியில் தாக்கப்பட்டு வயிறு பொருமிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி மீனவர்கள் பயன்படுத்திய பெறுமதிக்க வலைகள் மற்றும் அவர்களால் பிடிக்கப்பட்ட மீன்வகைகள் அனைத்தும் கடலில் மூழ்கின. இதற்கிடையில், வடமராட்சிக் கடலில் நிலவும் கொந்தளிப்புக் காரணமாக வடமராட்சி மீனவர்கள் நேற்று கடலுக்குச் செல்லவில்லை. (எ-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் மாவீரர்தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்

அமெரிக்கா,டிசெ.1

தாயக விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவு தினத்தை உலக நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் உணர்வு வெழுச்சியுடன் நினைவுகூர்ந்தனர்.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, டென்மார்க் ஆகிய நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களால் நினைவுதின நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

**அமெரிக்காவில்...**

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வுகளில் அமெரிக்க மற்றும் தமிழீழத் தேசியக்கொடிகள் என்பன ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும், சிறப்புரைகளும் இடம்பெற்றன. சிறப்புரைகளை விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமார், உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் வைத்திய கலாநிதி ஜெயலிங்கம், பொறுப்பாளர் க.கருணாகரன் மற்றும் ஒஹாயோ மாநிலத்திலிருந்து வருகை தந்த வரும் போராளிகளால் 'உஷன் அம்மா' என்றழைக்கப்படுபவருமான திருமதி சின்னத்தங்கம் சரவணமுத்து ஆகியோர் நிகழ்த்தினர்.

இதேவேளை -

எதிர்வரும் 4 ஆம் திகதியன்று லொஸ் ஏஞ்சல்ஸ், நியூயோர்சி, புளோரிடா, சிக்காக்கோ, சியாற்றில், துன்பிரான்ஸிஸ்கோ ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 5 ஆம் திகதி ஒஹாயோ மாநிலத்திலும் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கனடாவில்...**

கனடாவின், டொரன்ரோவில் 6 இடங்களில் மாவீரர்தின நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

**டென்மார்க்கில்...**

டென்மார்க்கின் 'கேர்னிங் கொங்கிரஸ்' மண்டபத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழீழத்தேசியக் கொடியேற்றலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது. தொடர்ந்து விரிவுரையாளர் சிறிஸ்கந்தராசாவின் விசேட உரையும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் நூல் வெளியீடுகளும் இறுவட்டு வெளியீடுகளும் இடம்பெற்றன.

**ஆஸ்திரேலியாவில்...**

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் சிட்னி நகரில் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஈழத் தமிழ் மக்களால் நடத்தப்பட்டன.

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பித்த மாவீரர்தின நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் ஆஸ்திரேலியப் பரப்புரைப் பொறுப்பாளர் சபேசன் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'சமரும் சமாதானமும்' என்னும் நூலை ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் லாறி பேர்க்ஸ்ஸன் வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(10-202)

# கிராமியமட்ட சுற்றாடல் குழுக்களுக்கு அடுத்த வாரத்தில் விழிப்பூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கிராமியமட்ட சுற்றாடல் குழுக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவின் பணிப்பாளர் அனில் சுநிதவின் பணிப்பின் பேரில் நடதப்படவுள்ள இந்நிகழ்ச்சித் திட்டத்தில் மாநகர சபைக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள சுற்றாடல் விழப்புக்குழுக்களிலிருந்து தலா இரண்டு பேர் வீதம் 100 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திண்மக் கழிவுகளின் முகாமைத்துவம் பற்றி நடத்தப்படவுள்ள மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தில் மாநகர ஆணையாளர் கலாநிதி குணராசா கலந்துகொண்டு கருத்துரையாற்றவுள்ளார்.

ஒரு நாள் பயிற்சித்திட்டமாக நடத்தப்படவுள்ள இந்நிகழ்வு அடுத்தவாரம் யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக மாநகரசபையின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர் அ.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

(10-13)



சண்டிலிப்பாய் பிரதேச எழுச்சிப் பேரவையால் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 400 மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இம்ரான் - பாண்டியன் படையணியைச் சேர்ந்த தனேந்திரன் பொதுச்சுடர் ஏற்றுவதைப் படத்தில் காணலாம். *(படம்:- மாதகல் செய்தியாளர்.)*

# கைவினைப்பொருள் உற்பத்தியைப்பெருக்க விரைவில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்குடாநாட்டில் கைவிணைப் பொருள்களின உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இதற்கான பயிற்சிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்.செயலகத்தில் இயங்கும் மாவட்டத் தொழில்துறைத் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எமது பாரம்பரிய கைத்தொழில் வளங்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயே இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், நல்லூர் மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் பொருள்களைக் காட்சிப்படுத்துவதற்குப் பொதுவான காட்சி அறை இல்லாமையால் பல்வேறு அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளதாக மாவட்ட தொழில்துறை அலுவலர் பி.ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் நிலவிவரும் சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி யாழ்.குடாநாட்டிற்கு வருகைதரும் தென்பகுதி மக்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் பொருள்களைப் பார்வையிட ஆர்வமாகவுள்ளனர்.

இங்கு கைத்தொழில் உற்பத்தி இடங்கள் யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இல்லாததனால் அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதுடன், அத்தகைய உற்பத்தி நிலையங்களுக்குச் செல்வதனைத் தவிர்த்து வருகின்றனர்.

இதனால் யாழ்.குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பு அற்றுப் போகின்றது. இதனைத் தவிர்க்கும் முகமாகவும், யாழ்.குடாநாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்தியை ஊக்குவிக்கவும் பொதுவான ஒரு காட்சி அறையை அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

(10-5)

# இலங்கைக்கு வழங்கும் உதவுதொகையை ஆஸ்திரேலியா இரு மடங்காக அதிகரித்துள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.1

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை முன்னேற்றும் வகையில் ஆஸ்திரேலிய அரசு இலங்கைக்கு வழங்கும் உதவு தொகையை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

இந்த அடிப்படையில் அடுத்த வருட அபிவிருத்தித் திட்டங்களுக்கு 23 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

மக்களின் மனிதாபினமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகள், கல்வி அபிவிருத்தி தாய்மார், சிறுவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கல், சமுதாய மறுசீரமைப்பு, இயற்கை முகாமைத்துவ ஆய்வு போன்ற துறைகளை விருத்தி செய்வதற்கே இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி வாய்ப்பினைப் பெறுவதற்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்களும் சுற்றுச் சூழல் ஆராய்ச்சி முகாமைத்துவப்பணிகளுக்கு 8 லட்சம் ஆஸ்திரேலிய டொலர்களும் -

இயற்கை முகாமைத்துவ ஆய்வுக்கு 1.5 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்களும் சிறுவர்கள் மற்றும் தாய்மாருக்கான சுகாதார மற்றும் போசாக்கு நடவடிக்கைகளுக்கு. ஒரு மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்களும் -

இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு 5.7 மில்லியன் டொலர்களும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மீன்பிடி விவசாயம் மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவற்றின் அபிவிருத்திக்கு 4 மில்லியன் டொலர்களும் வழங்கப்படவுள்ளன.

(10-5)

# மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் உக்ரைனில் வலுப்பெறுகின்றன!

கியேவ்,டிசெ.1

உக்ரைனில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருகின்றன.

கடந்தவாரம் நடைபெற்ற சர்ச்சைக்குரிய தேர்தலால் எழுந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் புதிய வாக்களிப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்துள்ளன.

பதவி விலகிச் செல்லும் ஜனாதிபதி லியோனிட் குச்மாவும் அத்தகைய ஆலோசனையை ஆதரித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட பிரதமர் விக்டர் யனுகோவிச் வெற்றிபெற்றார் என அறிவிக்கப்பட்டது. ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக எதிர்க்கட்சியான லிபரல் கட்சி வேட்பாளர் விக்டர் யஷ்ஷெங்கோ குறைகூறினார்.

இருவரினதும் ஆதரவாளர்களும் வீதிகளில இறங்கிப் போராட்டம் நடத்துவதனால் நாடு பெரும் சிக்கல்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

இதேவேளை -

உக்ரைனின் சர்ச்சைக்குரிய ஜனாதிபதித் தேர்தல் குறித்த விவாதங்களை அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் விசாரணைசெய்ய ஆரம்பித்துள்ளது.

இரு தரப்பின் ஆதரவாளர்களும் நீதிமன்றத்துக்கு வெளியே அமைதியாக ஒன்றாக நேற்றுக் கூடியிருந்தனர்.

விக்டர் யுஷ்ஷெங்கோவின் ஆதரவாளர்கள் இத்தேர்தல் குறித்த 1,100 குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

அத்தோடு, யனுகோவிச்சின் தேர்தல் பிரசாரக் குழுவின் தலைவரான தைப்போக் அக்குழுவின் தலைவர் பதவியையும் தான் வகித்து வந்த மத்திய வங்கியின் தலைமைப் பதவியையும் ராஜினாமாச் செய்துள்ளார்.

உக்ரைன் இரண்டாகப் பிரிவடையாது, அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை - இவ்வாறு பதவி விலகும் உக்ரைன் ஜனாதிபதி லியோனிட் குச்மா தெரிவித்தார்.

## உலக அரங்கில்

அதிக சுயாட்சி கேட்கப்போவதாக எச்சரித்து வரும் உக்ரையின் பிராந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்திய பின்னரே லியோனிட் குச்மா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுயாட்சிக்கான கோரிக்கைகளைப் பாதுகாப்பு அமைச்சர் ஓலக்ஸாண்டர் குஷமுக்கும் நிராகரித்துள்ளார்.

எந்தச் சூழ்நிலையிலும் தமது இராணுவம் உக்ரைனின் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் - என்றும் அவர் மேலும் கூறினார்.

உக்ரைன் பிளவுபடக்கூடாது என்று நேட்டோ அமைப்பின் செயலாளர் நாயகம் ஷெபரும் ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைக்கான இயக்குநர் ஜாவியா சொலோனாவும் கூட எசசரித்துள்ளனர்.

(க)

# பர்மா எதிர்க்கட்சித் தலைவி ஆங்கன் சூசி மேலும் ஒரு வருடத்திற்கு தடுப்புக் காவலில்

பர்மாவின் ஜனநாயகத்திற்கான தேசிய எதிர்க்கட்சிக் கூட்டணியின் தலைவி ஆங்கன் சூஷி மேலும் ஒரு வருடத்திற்கு வீட்டுக் காவலில் வைக்கப்படுவார் எனப் பொலஸார் தெரிவித்தனர் என அவரது ஆதரவாளர்கள் கூறியுள்ளனர்.

தற்போது விடுவிக்கப்பட்டிருக்கும் காலக்கெடுவின் முடிவிலும் அவர் விடுதலை செய்யபபடுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

2003 ஆண்டு மே மாதம் முதல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆங்கன் சூஷி, தலைநகர் ரங்கூனில் உள்ள தனது மாளிகைக்கு மாற்றப்படுவதற்கு முன்பதாகப் பல மாதங்கள் சிறையிலும் மற்றும் ஓர் இராணுவ முகாமிலும் கைப்பற்றப்பட்டிருந்தார். இவரது சொந்தப் பாதுகாப்புக்காகவே அவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என பர்மா அரசு கூறுகின்றது. இதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என ஆங்கன் சூஷியின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் 9 ஆயிரம் சிறைக் கைதிகள விடுதலைசெய்யப்பட்ட நிலையில் ஆங்கன் சூஷி விடுதலைசெய்யப்படுவார் என்று அவரது கூட்டணியினர் நம்பியிருந்தனர் எனச் செய்தியாளர் கூறுகின்றார்.

(க)

# பிலிப்பைன்ஸில் வெள்ளம், மண்சரிவு குறைந்தது 40 பேர் உயிரிழந்துள்ளனர்!

பிலிப்பைன்ஸ் வடக்கு பகுதியில் அடைமழையால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு என்பவற்றால் குறைந்தது 26 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணியாளர்கள் பின்தங்கிய பிரதேசங்களுக்குச் செல்லமுடியாமல் உள்ளதால், கொலல்ப்பட்டவர்களின் எண்ணிக்கையைத் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளதென அதிகாரிகள் கூறினர்.

தலைநகர் மனிலாவில் இருந்து 50 கிலோமீற்றர் கிழக்கே அமைந்துள்ள பிரதேசத்தில் பல தடவைகள் மண்சரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த அசம்பாவிதங்களில் 14 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் அநேகமானோர் சிறுவர்கள் ஆகும்.

மத்திய மாநிலத்தில் 2 பாலங்களும் சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகிறது.

# ஜப்பானில் பூமியதிர்ச்சி 11 பேர் வரை காயம்!

டோக்கியோ,டிசெ.1

ஜப்பானின் ஹொக் கைடோ தீவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் 11 பேர வரை காயமடைந்துள்ளனர்.

நள்ளிரவு 3.30 மணியளவில் இப்பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. 7.1 புள்ளி ரிச்டர் அளவில் இப்பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

இப்பிரதேசத்தில் மக்கள் தொகை குறைவாக இருப்பதால், இப்பூமி அதிர்ச்சியால் ஏற்பட்ட சேதம் குறைவாகவே இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் பணியாளர்கள் அப்பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்ததின வாழ்த்து




அராலி வடக்கைச் சேர்ந்தவர்களான புஸ்பராஜா சர்வாஜினி தம்பதிகளின்

செல்வப் புதல்வி செல்வி **பிரேமிகா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று(01.12.2004) புதன் கிழமை சுவிட்ஸர்லாந்திலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். செல்வி பிரேமிகாவை அன்புள்ள அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மாமார், சித்திமார், ஆசைமாமா, தாத்தாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, அண்ணாமார், அக்காமார் அனைவரும் இந்த இனிய நன்னாளில் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் சீரோடுஞ் சிறப்போடும் வாழ்க என உளமார வாழ்த்துகின்றார்கள்.

அராலி வடக்கு. 39105

தகவல்:
புஸ்பன்–சப்பா
அம்மப்பா குடும்பம்

---

## வடமராட்சி ...க்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் மணல் விநியோகம் பற்றிய அறிவித்தல்

இன்று (01.12.2004) புதன்கிழமை தொடக்கம் மீண்டும் மணல் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
விநியோக ஒழுங்குகள் பின்வருமாறு:

அ. 01.12.2004 - இன்று புதன்கிழமை குறிப்பிட்ட மணல் அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு விநியோகம் நடைபெறும்.

ஆ. 02.12.2004 - கடந்த 05.11.2004 ஆம் திகதி குறிப்பிட்ட மணல அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு விநியோகம் நடைபெறும்.

இ. 03.12.2004 - கடந்த 13.11.2004ஆம் திகதி குறிப்பிட்ட மணல அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு விநியோகம் நடைபெறும்.

(C/39400)(42-16-17)

- நிர்வாகம்.

---

## FACULTY OF SCIENCE, UNIVERSITY OF JAFFNA

## NOTICE

***ENGLISH AS A SECOND LANGUAGE EXAMINATION - 2004***

The following examinations are scheduled to be conducted on the following dates. The students who were not successful in previous attempts could sit for these examinations.

| | |
|---|---|
| Listening Test | 11.30 a.m. to 12.30 p.m. on 03.12.2004 in the Kailasapathy Auditorium |
| Selection of Topic for Essay Writing | On or before 10.12.2004 |
| Oral Exam | 30th and 31st of December, 2004 |

For further details please contact the Office of the Dean, Faculty of Science.

**Vice - Chancellor.**

(C-39408) (24-16-17-42)

---

## சுற்றுலா மையமாக புத்தளம் மாவட்டம்

புத்தளம்,டிசெ.1

புத்தளம் மாவட்டத்தைச் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதற்கான பல திட்டங்களை வடமேல் மாகாணசபை அமுல்படுத்தவுள்ளது. இது சம்பந்தமான கலந்துரையாடலொன்று அண்மையில் கற்பிட்டியில் இடம்பெற்றது.

வடமேல் மாகாண முதலமைச்சர் அத்துல விஜயசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புனர்வாழ்வு, புனரமைப்பு பிரதியமைச்சர் த.மு.தஸநாயக்க, கற்பிட்டி பிரதேச சபைத்தலைவர் எஸ்.எம்.றியாஸ், வடமேல் மாகாணசபை உறுப்பினர் என்.டீ.தாஹிர், பிரதேச செயலாளர் ஏ.எம்.பண்டார மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவர்வதற்காக கற்பிட்டிப் பகுதியிலுள்ள தீவுகள் மற்றும் இயற்கை எழில்கொஞ்சும் இடங்களை அபிவிருத்தி செய்வது, குறிப்பாக முகத்துவாரம் என்னுமிடத்தில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்று அமைப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

கற்பிட்டிப்பகுதியிலுள்ள தீவுப்பகுதிகளை புனரமைப்புச் செய்து படகோட்டம், உல்லாச சவாரி போன்ற துறைகளை அறிமுகம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி சுற்றுலாத்துறையாக அபிவிருத்தி செய்யப்பட்டால் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

## அன்னாசி மரத்துண்டங்கள் விற்பனை

சாவகச்சேரி,டிசெ.1

சாவகச்சேரி நகரில் அன்னாசி மரத் துண்டங்கள் (முகைகள்) விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஒரு துண்டம் இருபத்தைந்து ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இத்துண்டங்கள் வன்னிப் பகுதியில் இருந்து தருவிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10-31)

## மானிப்பாய் இந்துவில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.1

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் எதிர்வரும் 25ஆம்திகதி முதல் தொடர்ந்து 10 நாள்கள் மாபெரும் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

கண்காட்சியில் தென்னிலங்கையைச் சேர்ந்த கைத்தொழில், வர்த்தக நிறுவனங்களும், உற்பத்தி தொழிற்சாலைகளும் பங்குபற்றவுள்ளதாக மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் பேராசியர் சு. லீலா கிருஸ்ணன் தெரிவித்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சி நிதிக்காகவே இது இடம்பெறவுள்ளது. (10-185)

---

## இப்படியும் இருக்கின்றார்கள்

இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியானவற்றை நாம் கை தவறவிட்ட வேளை, எந்த விதமான பிரதி உபகாரமும் இன்றி தமது நேரத்தையும் பொருட்படுத்தாமல் பணத்தையும் செலவு செய்து மிகுந்த சிரமத்தினிடையே சில மணி நேரத்தில் உரியவரிடம் ஒப்படைத்த பெருமையை உடையவர்களான -

திரு. சுந்தரலிங்கம் *வெற்றிலைக்கடை உரிமையாளர் – திருநெல்வேலி*
திரு. க. பாலச்சந்திரன் *மேற்படிகடைப் பணியாளர் – திருநெல்வேலி*
திரு. க. தெய்வேந்திரன் *அங்காடி வியாபாரி – திருநெல்வேலி*
திரு. ந. முகுந்தன்
திரு. பு. ஜெயச்சந்திரன் } *அங்காடி செயலகப் பணியாளர்கள் – திருநெல்வேலி*
திரு. பு. விக்னேஸ்வரன்

ஆகியோரின் நற்பண்புள்ள நற்செயலைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

- நற்செயலால் மகிழ்வுறும் பயனாளி.

(39136)(42-16-17)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 21 – 07 – 1943



*மறைவு* 13 – 12 – 2003

### அமரர் நவரத்தினம் கருணாகரன்

(இலிகிதர் - இ.போ.ச.)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் மனது
ஈண்டு உமது நினைவுடனே நாமிங்கு வாழ்கின்றோம்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

க.குமரன் (மகன்)

(39137)(42-16-17)

---

## Jayoda ஜயோதா ජයෝද

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6547596 முதல் 6560270 வரை
சீட்டிழுப்பு இல. 89 திகதி 29-11-2004

வெற்றி எண்கள் **3 2 4 1 9 5** சுப்பர் எண் **09**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,27,56,425/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,27,56,425/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 5,000/- | 5,65,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,117 | 500/- | 5,58,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,146 | 50/- | 5,57,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,10,494 | 10/- | 11,04,940/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 14 | 5,000/- | 70,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 1,000/- | 1,11,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,120 | 100/- | 1,12,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,050 | 20/- | 2,21,000/- |
| மொத்தம் | 1,35,186 | | 55,02,340 /- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,02,340/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. **1,30,66,450/-**

தொடர் இல. 7513196 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 02 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6553827-0-96
6556803-5-52
6551312-0-79
6555147-2-35
6551107-5-29
6559373-1-16
6555514-1-84
6548014-9-95

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செஸ்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

---

## மரண அறிவித்தல்

### யோசேப்பு அன்ரனி

(ஓய்வு பெற்ற புகையிரதப்பகுதி கடவுச்சீட்டு பரிசோதகர் - மாகியம்பதி புனித செபஸ்ரியார் ஆலயத் தொண்டர்)



மாகியம்பதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோசேப் அன்ரனி நேற்று (30.11.2004) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் வரோணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மேரிறோசின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராயப்பு, காலஞ்சென்ற கபிரியேல், ஞானப்பு, ஆனாசிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் இயூஜின்மேரி (சுமங்கலி), மேரிஸ்ரெலா (அனார்கலி), நியூட்டன் (கனடா), சுதாகரன் (யூட்), நிரோஜிகன் (தீபன்), நிரோஜினி (சீமாட்டி) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் அருமைநாயகம், லயனல், தாரணி, அருந்தவசிசிலி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் றொசான், நிருசன், மீரா, டண்ஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பொன்னையா, மீனாட்சி ஆகியோரின் மருமகனும் ஆபிரகாம், நீற்றம்மா, ஞானப்பிரகாசம், இராஜேந்திரம் (பிரான்ஸ்), குணசிங்கம் (கனடா), றோஸ்மேரி, புஸ்பறோஜா (பிரான்ஸ்), வீரசிங்கம் (கனடா), இராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் அமலோற்பவம், தெய்வமலர், தர்சினி, யாழினி, தர்மினி, சொரூபினி, பிரியா (பிரான்ஸ்), பிரதீஸ் (பிரான்ஸ்), சில்வியா (பிரான்ஸ்), ஜெனிற்றா (கனடா), டெஸமன் (கனடா), டெனிஸ் (கனடா), டெரிக் (கனடா), பிரிட்ணி (கனடா), சரிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.12.2004) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து மாகியம்பதி புனித செபஸ்ரியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியுடன் புனித செபஸ்ரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாகியம்பதி,*
*அளவெட்டி.*

(39138)(42-16-17)

*தகவல்:*
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# 3 முக்கிய விடயங்களில் தெற்கின் நிலை என்ன?

இனப்பிரச்சினை விடயத்தில் ஈழத்தமிழர்களுக்கு மூன்று விடயங்கள் முக்கியமானவை; மூலாதாரமானவை.

அவை:- தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விடயத்தில் அடிப்படை விவகாரங்களாக - அம்சங்களாக - அமைவன இந்த மூன்றும்தான்.

இந்த மூன்று விடயங்கள் தொடர்பாகத் தென்னிலங்கை என்ன முடிவைக் கொண்டுள்ளது, என்ன தீர்வை எடுக்கப் போகின்றது என்பதில்தான் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான வாய்ப்புத் தங்கியுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட - ஒத்திசைவற்ற - அடிப்படைக் கோட்பாட்டுக் குழப்பம் மிக்க - தென்னிலங்கை அரசியல் முறைமை இந்த மூன்று விவகாரங்களிலும் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கப் போவதில்லை என்பது தெளிவு. என்றாலும், அவை இவ்விகாரங்களில் என்ன கருத்து நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன என்பதை வெளிப்படுத்துவது, இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அவசியமானதாகும்.

இதன் அடிப்படையில்தான் தமது மாவீரர் தின உரையில் தென்னிலங்கையைப் பார்த்து ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

*“ஜனாதிபதி சந்திரிகாவிடமும், அவர் கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றது. அதாவது, தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படை குறித்து - தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவை குறித்து - உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்”* - என்று பிரபா கோரியிருக்கின்றார்.

அரசின் பக்கம் இல்லாமலும் எதிரணியின் பக்கமும் இல்லாமலும் அரைகுறையாகப் பிரிந்து, இங்கும் அங்குமாக அல்லாடுகின்ற - சிங்கள, பௌத்த மேலாண்மை வாதத்தில் ஊறித்திளைத்த - ஜாதிக ஹெல உறுமய கட்சி இது விடயத்தில் தலைவர் பிரபாவின் உரையில் சுட்டிக்காட்டிய அணிக்குள் அடங்காமல் போயிருக்கலாம். அந்தக் கட்சிக்கும் சேர்த்துத்தான் இந்த வேண்டுகோளைப் பிரபாகரன் வெளியிட்டிருப்பார் எனக் கருதுவோம்.

தலைவர் பிரபாவின் இந்த வேண்டுகோளுக்கு அமையத் தென்னிலங்கைக் கட்சிகள் தமது நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்துமா என்பது சந்தேகமே.

ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியும் இது விடயத்தில் நழுவல் வழுவல் போக்கைக் கடைப்பிடிக்கும் என்பது நிச்சயம், இக்கேள்விக்குப் பதிலளிப்பதன் மூலம் தங்களின் உண்மைச் சொரூபத்தைச் சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்தி, தங்களின் நியாயவாத முகமூடியைக் கிழிக்க அவை தயாராகமாட்டா என்பது உறுதி.

ஆனால், சிங்கள, பௌத்த மேலாண்மைவாதத்தில் ஊறித்திளைத்திருக்கும் ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் இது விடயத்தில், தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளைப் புறந்தள்ளி, நிராகரித்து ஒதுக்குபவர்கள் போலத் தங்களைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம் இனவெறியைத் தூண்டி, பேரினவாதிகளின் வாக்கு வங்கியை மேலும் சுருட்டலாம் என்ற கருத்தில் - குறுகிய அரசியல் சுயலாப நோக்கில் - செயற்படுவர் என எதிர்பார்க்கலாம்.

இந்த மூன்று விடயங்களிலும் தமிழர்களின் எதிர்பார்ப்பை - அபிலாசைகளை - நிறைவு செய்யும் தீர்வைத் தராமல், இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு என்பது சாத்தியமே இல்லை என்பதைத் தென்னிலங்கை உணரவேண்டும்.

எனவே, இந்த மூன்று விடயங்களிலும் தங்களுக்குள் கருத்தொருமித்த நிலைப்பாட்டுக்கு வருவதற்கு சிங்களம் தயாராக வேண்டும்.

இல்லையேல் அமைதித் தீர்வும், சமாதான முயற்சிகளும், இணக்கப் பேச்சுகளும் கானல் நீராகத்தான் போய்முடியும்.

இதுவிடயத்தில் கருத்தொருமித்த நிலைப்பாட்டைத் தென்னிலங்கை எட்ட வேண்டுமானால், பிரதான கட்சிகள் ஒவ்வொன்றும் இது விடயத்தில் தங்களின் நிலைப்பாட்டை முதலில் பகிரங்கப்படுத்துவது அவசியம்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சமூகத்தில் அந்தஸ்துப் பெற வாய்ப்பு

## புலிகளுடன் இணைந்து 'யுனிசெவ்' செயற்றிட்டம்

அக்கரைப்பற்று,டிசெ.1

கடந்தகால யுத்தங்களினால் சிறுவர்கள் கல்வி மற்றும் அடிப்படை வசதிகளின்றி பலவாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை சமூகத்தில் அந்தஸ்துள்ளவர்களாக மாற்றுவதற்கு யுனிசெவ் நிறுவனம் இலங்கை அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் இணைந்து செயற்பட்டு வருகிறது.

- இவ்வாறு 'யுனிசெவ்' நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பெற்றிக் கெம்பல் கூறினார்.

சிறுவர் நன்நடத்தை திணைக்களமும், அக்கரைப்பற்று பிரதேச செயலகமும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று கலாசார நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற சிறுவர்தின விழாவில் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்படி தெரிவித்தார்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக ஐ.எல்.எம்.சம்சுதீனும், சிறப்பு அதிதிகளாக சமூக சேவை உத்தியோகத்தர் எம்.பி.எம். ஹாசிம், உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எஸ்.கியாஸ் சாஹுல் ஹமீட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும் அங்கு பெற்றிக் கெம்பல் கூறுகையில்:-

அம்பாறை மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டில் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான செயற்றிட்டங்களை மேற்கொள்ள 700 ஆயிரம் அமெரிக்க டொலர்களை செலவு செய்யவுள்ளோம். கடந்த 2004 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 400 ஆயிரம் டொலர்களை செலவு செய்வதில் பின்னடைவு ஏற்பட்டது. இதற்குக் காரணம் சரியான திட்டமிடல் இல்லாமை ஆகும். ஆனால், 2000 ஆண்டுக்கான நிதி செலவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட 18 வயதுக் குட்பட்ட சிறுவர்களை விடுத்து அவர்களுக்குக் கல்விகற்கும் உரிமைகளை வழங்கிவருகிறோம். இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்கள். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர்களும் சமூகத்தில் ஓர் பங்கு என்பதினை நாங்கள் உணர்கின்றோம். பெற்றோர்களினால்தான் சிறுவர்களின் உரிமைகள் பறிகப்படுகின்றன. சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக பெற்றோர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.(ஐ-க)

# இலங்கை-இந்தியக் கடல் எல்லையில் சிவப்பு விளக்கு மிதவைகள் நிறுவுக!

## பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை

சென்னை,டிசெ.1

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண அரசு ஏற்கனவே அறிவித்த கடல் - எல்லையை வரையறுக்கும் - 'சிவப்பு விளக்கு மிதவை'களை உடனே நிறுவ வேண்டும் எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் ஜி.கே.மணி தெரிவித்தார்.

திருநெல்வேலியில் வெள்ளிக்கிழமை இது தொடர்பாக அவர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கடல் எல்லையை வரையறுக்கும் இடங்களில் 'சிவப்பு விளக்கு மிதவைகள்' நிறுவப்படும் என தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தது. அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனவே, அந்த மிதவைகளை உடனே நிறுவவேண்டும்.

மேலும், கச்சதீவை மீட்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சேது சமுத்திரத் திட்டத்தால் மீனவர்களுக்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் எந்த விதப் பாதிப்பும் ஏற்படாது என மத்திய அரசும், ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர். எனவே, திட்டத்தை நிறைவேற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

மத்திய அரசிலுள்ள - தமிழகத்தைச் சேர்ந்த - 12 அமைச்சர்களும் தமிழகத்திற்குத் தேவையான பல்வேறு திட்டங்களையும், கூடுதல் நிதியையும் பெற்றுத்தரத் தயாராக உள்ளனர். அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழக முதல்வர் முனவரவேண்டும். அதைவிடுத்து மத்திய அமைச்சர்களையும், ஆட்சியில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளையும் தரக்குறைவாக விமர்சனம் செய்கிறார் அவர். அந்தப் போக்கை அவர் கைவிட வேண்டும். அவரின் இத்தகைய செயற்பாட்டினால் தமிழகமும், தமிழக மக்களும்தான் பாதிக்கப்படுவார்கள் - என்றார். (ஐ-க)

## எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள

# ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கு 3ஆயிரத்து 827 பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.1

எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை 3ஆயிரத்து 827 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மகிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கு 5 லட்சத்து ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுள் 3 லட்சத்து 74 ஆயிரத்து 411 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 819 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகி 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பிடும் பணியின் முதற்கட்டம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை 91 பாடசாலைகளில் நடைபெறும்.

இரண்டாம் கட்டம் ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வரை 26 பாடசாலைகளில் நடைபெறும்.

இதேவேளை -

3ஆம் தவணை விடுமுறைக்காக அரச பாடசாலைகள் எதிர்வரும் 10ஆம் திகதி மூடப்பட்டு அடுத்த ஆண்டு முதலாம் தவணைக்காக ஜனவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

முதலாம் கட்ட மதிப்பீடு நடைபெறும் பாடசாலைகள் ஜனவரி மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

(10-202)

# பருத்தித்துறை வீதியில் போட்டியிடும் பஸ்-மினிபஸ்களால் மக்கள் அச்சம்

வடமராட்சி,டிசெ.1

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சேவையிலீடுபடும் மினிபஸ்களும் போக்குவரத்துச் சபை பஸ்களும் ஒன்றையொன்று முந்துவதற்காகப் போட்டியிடும் சம்பவங்கள் கடந்த சில நாள்களாக மீண்டும் இடம்பெற்றுவருகின்றன.

இவ்வாறு ஒரு வாகனத்தை மற்றைய வாகனம் துரத்துவது பரஸ்பரம் இடம்பெற்றுவருவதால் பயணிகள் பெரும் அச்சத்தை எதிர்கொண்டுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி வீதியில் பயணத்துக்காகக் காத்திருக்கும் பயணிகளை ஏற்றாமலேயே போட்டிபோட்டு ஓடும் மினிபஸ்களும் பஸ்களும் சென்றுவிடுகின்றன.

இந்த வீதியல் சராசரியாக அரை மணி நேரத்துக்கு ஒரு தடவையே பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன. ஆனால், 10 அலலது 15 நிமிட இடைவெளிக்குள் மினி பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில் பருத்தித்துறையிலிருந்தோ, யாழ்ப்பாணத்திலிருந்தோ பஸ்கள் புறப்படும் வேளை பார்த்து மினிபஸ்கள் புறப்படுகின்றன. இதனாலேயே ஒன்றையொன்று முந்திக்கொள்வதற்கு போட்டிகள் இடம்பெறுகின்றன. இப்போட்டியால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உருவாகுவதுடன் பயணிகளும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(10-173)

## நாளை

கார்த்திகை 17
வியாழக்கிழமை
(02.12.2004)
திதி: பஞ்சமி
முற்பகல் 11.16 வரை
நட்சத்திரம் : பூசம்
நண்பகல் 12.05
சுபநேரம் : 07.45 - 09.15
ராகுகாலம் : 01.45 - 03.15
(பழைய நேரப்படி)

## ஆசைவார்த்தை கூறி

# கொழும்புக்கு அழைத்துச் சென்று 25 ஆயிரம் ரூபா பணம் அபகரிப்பு

வலி.வடக்கு,டிசெ.1

வெளிநாட்டில் இருக்கும் மகள் அனுப்பிய பொருள்களை எடுத்து வருவதற்கென கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் 25 ஆயிரம் ரூபா பணத்தை இழந்து வீடு திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் அளவெட்டியில் இடம்பெற்றுள்ளது.

மத்திய கிழக்கு நாட்டில் வேலை செயயும் பணிப்பெண் ஒருவருடன் தான் வேலை செய்ததாகக் கூறி கொழும்பைச் சேர்ந்த ஒருவர் குறிப்பிட்ட பெண்ணின் வீட்டுக்கு வந்து தன்னை அறிமுகம் செய்துள்ளார்.

அத்துடன் மகள் தொலைக்காட்சிப் பெட்டி, டெக் உட்பட வேறு பொருள்களை அனுப்பியுள்ளதாகவும் அவற்றுக்கு சுங்கத் தீர்வை கட்டவேண்டியுள்ளதால் பணம் தரும்படியும் கேட்டுள்ளார்.

மகள் அனுப்பிய பொருள்களை எடுத்து வரத் தாமும் கூட வருவதாகக் கூறி பெணணின் தாயும் சகோதரியும் அடுத்தவர்களிடம் கடன்பட்ட பணத்துடன் கொழும்பு சென்றுள்ளனர்.

தாயை 'லொட்ஜ்' ஒன்றில் தங்கவைத்தவர் மகளுடன் சென்று பொருள்களைப் பெற்றுத்தருவதாகக் கூறி அவரைக் கூட்டிச் சென்றுள்ளார்.

பின்னர் அலுவலகம் ஒன்றின் முன் அப்பெண்ணை நிற்க விட்டுவிட்டுப் பணத்தை தருமாறு வேண்டிக்கொண்டு உள்ளே சென்றார் திரும்ப வராமலே தலைமறைவாகியுள்ளார்.

நீண்ட நேரத்தின் பின்னர் அப்பகுதியில் நின்றவர்களின் உதவியுடன் மகள் தாய் நின்ற 'லொட்ஜுக்கு' வந்து தாம் ஏமாற்றப்பட்டதாகக் கூறியுள்ளார்.

வெளிநாட்டுப் பொருள்களைப் பெறச் சென்றவர்கள் தற்பொழுது வெறும் கையுடன் திரும்பி வந்துள்ளனர்.

இத்தகைய அறிமுகமற்றவர்களின் ஆசைவார்த்தைகளை நம்பி ஏமாறாமல் பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டும்.

(10-86)

## உதயவாக்கு

இரு கைகள் தட்டினால்தான் ஓசை வரும். இரு மனங்கள் இணைந்தால்தான் திருமணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

யாழ்.பிரதான வீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தியில் அமைந்த 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776736860.

(39131)

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்துக்கு அண்மையில் 2 பரப்புக் காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: காலை 8.00 - மாலை 5.00 மணி வரை T.P.: 021 222 5604, 0777 495229.

(39110)

## கடை விற்பனைக்கு

யாழ்.கன்னாதிட்டி வீதியில் கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 021 222 5604. (காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை).

(39131)

## மாடிவீடு விற்பனைக்கு

யாழ்.கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் சுற்று மதிலுடன் கூடிய 2½ பரப்புக் காணியும் சுற்று மதிலுடன் சேர்ந்த 3½ பரப்புக் காணியில் மாடி வீட்டுடன் கூடியது விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6736860.

(39131)

## தவறிவிட்டன

நன்னித்தம்பி தர்மராஜா ஆகிய எனது 592203898V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், வாகன லைசென்ஸும் சத்திரச் சந்திக்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நாகம்ஸ் சினிமாவிற்கு முன்பாகவுள்ள சண்ராஜ் தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கவும். T.P.: 021 222 5388.

(39104)

## O/L மாணவர்களுக்கு நூல்கள் விற்பனை

O/L பரீட்சை எடுக்கப்போகும் மாணவர்களுக்கு! 1. இலக்கியக்கட்டுரைகள், 2. வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும், 3. பொருளோ பொருள் நாடகத்தின் விளக்கமும் விமர்சனமும் எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியவை.

(39130)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களான 1972 - சிவில் எஞ்ஜினியர், 1970 B.Sc, M.Sc, 1973 B.Com எக்கவுண்டன், 1973 B.A. ஆசிரியர் ஆகியோருக்கு பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: T.சுப்பையா, கிருஷ்ணா திருமண சேவை, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(39129)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 6.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லயடிக்கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில் சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(38932)

# ஆசிரியர் வள நிலையங்களை செயல்திறன் மிக்கதாக்க முடிவு

அச்சுவேலி.டிசெ.1

ஆசிரியர் வள நிலையங்கள் அடுத்த வருடத்தில் இருந்து செயல்திறன் மிக்க தொழிற்பாட்டு மையங்களாகச் செயற்படுவதற்கான ஏற்பாடுகளை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு செய்துள்ளது.

கல்வி வலயங்கள் தோறும் நிறுவப்பட்டுள்ள ஆசிரியர் வளநிலையங்கள் ஆசிரியர்களின் கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகளை மேல் நிலைப்படுத்தி ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 26 கல்வி வலயங்கள் தோறும் ஆசிரியர் வள நிலையங்கள் செயற்படுவதோடு, அவற்றின் ஊடாகவே ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான செயல் அமர்வுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-11)

## பதவி வெற்றிடம்

புதிய கல்வி நிறுவனத்திற்கு
1. ஆசிரியர் (ஆண்டு 5 -O/L) சகல பாடத்திற்கும்
2. Clerk (பெண்) தேவை.
உடன் விண்ணப்பிக்கவும்.
(Bio - Data உடன்)
முகவரி: ஜெ.தயாபரன்,
மேதர்ஸ் லேன், மானிப்பாய். (39135)

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்டிசெ.1

அடுத்த ஆண்டில் முன்பள்ளிகளின் புதிய திட்டங் களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் யாழ்மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், க.இராசையா, மாநகர ஆணையாளர் க.குணராசா மற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(10-13)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்டிசெ.1

பெற்றோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கும், கலை நிகழ்வும் நேற்று முன்தினம் அச்சுவேலி மத்திய மகா வித்தியாலயத்தில் பி.ப.1.30 மணியளவில் யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி லோ. யோகராசா தலைமையில் நடைபெற்றது.

கோப்பாய் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி. கிழக்கு பிரதேச செயலர் இ.இராசதுரை, அச்சுவேலி பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் வ.திருஞானசம்பந்தர் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 104 பெற்றோர்கள் கலந்து கொண்டனர். பெற்றோர்களின் கலை நிகழவுகளும், முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(10-13)

## கண்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.1

மாவீரர் தினத்தை முனனிட்டு யாழ்பெரியகடை மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கமும, லயன்ஸ் கழகமும் இணைந்து இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்றை கடந்த 25 ஆம் திகதி யாழ்.கன்னாதிட்டி சயன்ஸ் ஹோல் மண்டபத்தில் நடத்தியது.

சங்கத் தலைவி திருமதி இ.தங்கராஜா தலைமையில் நடத்தப்பட்ட இம் முகாமில் சுகாதாரக் கல்வி அதிகாரி மரியதாஸ், டாக்டர் ரஞ்சன், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர்கள் பூமகள், முகுந்தா மற்றும் சுகாதார பரிசோதகர் தி.விஜயகுமார் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இம்முகாமில் நூறறுக்கும் மேற்பட்டோர் கண் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

(8-202)

நிவாரண, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண அமைச்சு

# வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பாலங்களை புனரமைத்தல்

# கேள்விகளுக்கான அழைப்பு

Compact Steel Bridging Component ஐ பயன்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பாலங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது ஐக்கிய இராச்சியத்திடமிருந்து ஒரு கடனைப் பெற்றுள்ளது. பின்வரும் பாலங்களுக்கான உட்கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்கான பொறியிடப்பட்ட கேள்வி(களை) 2004 டிசெம்பர் 22ஆம் திகதி பி.ப.3.00 மணி வரை வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாணத் திட்டம் கேள்விச் சபைத்தலைவர் பெற்றுக்கொள்வார்.

**மன்னார் மாவட்டம்**

| பக்கேஜ் | பாலம் மற்றும் வீதியின் பெயர் | அடையாள இல. | வீதி இல. | மீளளிக்கப் படாத கட்டணம் | கேள்விப் பிணையின் தொகை | ICTAD தரம் |
|---|---|---|---|---|---|---|
| P/06 | வெள்ளாங்குளம் தள்ளாடி வீதி | 1.04.19 | A32 | 1000/- | 120,000/- | M5 |
| | வெள்ளாங்குளம் தள்ளாடி வீதி | 1.04.20 | A32 | | | |
| | வெள்ளாங்குளம் தள்ளாடி வீதி | 1.04.21 | A32 | 1500/- | 200,000 | M5 |
| | வெள்ளாங்குளம் தள்ளாடி வீதி | 1.04.23 | A32 | | | |
| | வெள்ளாங்குளம் தள்ளாடி வீதி | 1.04.28 | A32 | | | |

**யாழ். மாவட்டம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P/13 | கொடிகாமம் புலோலி | 1.01.21 | AB31 | 1500/- | 180,000/- | M5 |
| | புலோலி சரசாலை | 1.01.23 | B75 | | | |
| | கொடிகாமம் புலோலி | 1.01.28 | AB31 | | | |

**வவுனியா மாவட்டம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P/19 | வவுனியா ஓமந்தை | 1.05.15 | A9 | 500/- | 100,000/- | M5 |

கேள்வி ஆவணங்கள் 2004 டிசெம்பர் முதலாம் திகதியிலிருந்து 2004 டிசெம்பர் 15ஆம்திகதி வரை சாதாரண வேலை நாள்களில் மு.ப.9.30 பி.ப.4.00 மணிவரை கொழும்பு 03, காலி வீதி, இல.177, 3ஆம் மாடியில் திட்ட அலுவலகத்திலிருந்து அல்லது வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாணத் திட்டக்காரியாலயம் கிளிநொச்சி மாவட்ட செயலகப் பிரிவு கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம்.

விரும்பின் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் முன் மேலுள்ள அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடலாம். வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள பாலங்களுக்கான ஸ்தல விஜயம் பற்றிய திகதிகளை கேள்விதாரர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பிக்கத் தகுந்த தரம் மற்றும் செல்லுபடியாகும் NCASL அங்கத்துவம் உடைய கேள்விதாரர்களுக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான கோரும் கடிதத்தினை சமர்ப்பிப்பதன்மூலம் மாத்திரமே கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

கேள்வி திறந்த பின் 90 நாள்களுக்கே கேள்விகள் செல்லுபடியாகும். மேலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொகையில் ஒரு கேள்விப் பிணையுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், கேள்வி திறக்கப்படும் திகதியிலிருந்து 120 நாள்களுக்குச் செல்லுபடியாகும்.

"செயலாளர், நிவாரண புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண அமைச்சு" என்று வரையப்படல் வேண்டும். கேள்விப் பிணையின் மாதிரிப் படிவத்துடன் சொல்லப்பட்ட முறையில் பிரசித்திபெற்ற வங்கி அல்லது காப்புறுதிக் கம்பனி அல்லது நிர்மாண உத்தரவாத நிதியிலிருந்து மாத்திரமே கேள்விப்பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி தாரர்கள் பாலங்கள் நிர்மாணம் தொடர்பாகத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆற்றலைக் கொண்டுள்ளனர் என்பதையும் குறிப்பிட்ட கேள்வி ஆவணங்களில் கேள்விதாரர்களுக்கான கேள்வி நிபந்தனைகளுக்கான அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆவண ரீதியான நிரூபணத்தையும் சமர்ப்பிக்கின்றனர் என்பதையும் உறுதிப்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

எச்சந்தர்ப்பத்திலும் வடக்கு - கிழக்கு திட்டத்தில் பாலங்கள் புனர்நிர்மாணத்தின் கீழுள்ள எந்த ஒப்பந்தகாரர்களுக்கும் ஆகக்கூடிய ஒப்பந்த எண்ணிக்கையாக 03 (மூன்று) பெக்கேஜ்ஜுக்கள் வழங்கப்படும். உள்நாட்டு முகவர்கள் அல்லது பாலங்களின் உதிரிப்பாகங்கள் விநியோகிக்கும் மாபேய் அன்ட் ஜோன்சன் UK இன் உப ஒப்பந்தக்காரர்கள் இக்கேள்வியில் கலந்துகொள்வதற்கு தகைமையுடையோர் அல்ல.

நகல்களுடன் மற்றும் இடதுபக்க மேல் பக்க மூலையில் திட்டத்தின் தலைப்பினை குறிப்பிடப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி(கள்) கொழும்பு 03, காலி வீதி, 177, 3ஆம் மாடி, வடக்கு - கிழக்கு பாலங்களைப் புனர்நிர்மாணித்தல் திட்டம், கேள்விச்சபைத் தலைவருக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச் செய்தல்வேண்டும்.

கேள்விகள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விகள் மூடப்பட்ட பின் உடனடியாக கேள்விச் சபைத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

தலைவர்,
திட்ட கேள்விச் சபை,
வடக்கு - கிழக்கு பாலங்கள் புனரமைத்தல் திட்டம்,
நிவாரண, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண அமைச்சு,
3ஆம் மாடி, 177, காலி வீதி, கொழும்பு - 03.

(சி. 39396) (43-19-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எய்ட்ஸ்’ என்னும் கொடிய நோயை விழிப்புணர்வால் இல்லாதொழிப்போம்!

உலகின் படுபயங்கரமான நோயாக சில தசாப்தங்களாக உருவெடுத்துள்ள “எய்ட்ஸ்” எனும் கொடிய நோய் மனித கலாசாரப் பண்பாடுகளையும் இன்று கேள்விக் குறியாக்கியிருக்கின்றது.

இக்கொடூர நோயின் பிடிக்கு வருடாவருடம் 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஆளாகின்றனர். மேலும், வருடாவருடம் 30 லட்சம் பேர் இறந்துபோகின்றனர்.

எய்ட்ஸ் வயது, பால் வேறுபாடின்றி இன்று உலக மக்களை அச்சுறுத்தி வருகின்றது. 1980களில் இனங்காணப்பட்ட இந்நோய் இன்று கோடிக்கணக்கான மனிதர்களை ஆட்டிப்படைத்து வருகின்றது.

இந்த எய்ட்ஸ் நோயின் தாக்கம் தென்னாபிரிக்கா, சீனா, இந்தியா எனப் பல நாடுகளில் மிக உச்சமாக உள்ளது.

### இலங்கையில்

எமது இலங்கைத் தீவில் எய்ஸ்ட் நோயின் தாக்கம் அதிகளவில் இல்லை. எனினும், அச்சமூட்டும் அளவில் உள்ளது உண்மையே.

இதுவரை இலங்கையில் 8,500இற்கும் மேற்பட்டோர் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் எனச் சுகாதாரத் துறையினர் கணிப்பிடுகின்றனர். இதில் 365இற்கு மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் இதன் தாக்கம் உள்ளது. கணிப்பீடுகளின்படி 500இற்கும் மேற்பட்டோர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் எனவும் இது சிலவேளை பல மடங்காகக் கூட இருக்கலாமெனப் பாலியல் நோய்ப பிரிவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நக்கீரன் தெரிவிக்கின்றார். அத்துடன், 27 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இப்புள்ளி விவரம் மிகவும் அச்சத்தை ஊட்டுவதாகவே இருக்கின்றது. அதாவது, எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்களை அதிகமானவர்களாகக் கொண்ட மாவட்டம் கொழும்பாக உள்ளபோதிலும் மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டமே வீதாசாரப்படி முதலிடம் பெறுகிறது.

### எய்ட்ஸ் தோன்றிய வரலாறு

தென்னாபிரிக்காவில் வாழும் ‘பச்சை இனக குரங்குகள்’ எச்.ஐ.வியை உடலில் கொண்டுள்ளன. இக்குரங்குகளுடன் பாலியல் தொடர்புகளை மனிதர் பேணியதன் மூலமே மனித இனத்துக்குள் இந்த வைரஸ் புகுந்ததாக நம்பப்படுகிறது.

### எச்.ஐ.வி.

எய்ட்ஸ் நோய்க்கான காரணியே எச்.ஐ.வி. (HIV) ஆகும்.

H - Human (மனித)

I - Immuno deficiency (நிர்ப்பீடனம் குறைக்கும்)

V - Virus (வைரசு)

‘மனித நிர்ப்பீடன சக்தியைக் குறைக்கும் வைரஸ்’.

HIV என்னும் இந்த நுண்கிருமி எமது குருதித் தொகுதியை அடைந்து அங்கு எமது நிர்ப்பீடன சக்திக்குப் பொறுப்பாகவுள்ள நிணனீர்க் குழியங்களை (T4) ஊடுருவி அங்கு பெருக்கமடைந்த பின் நிணநீர்க் குழியங்களை அழிவடையச்செய்து குருதியில் வெளியேறுகின்றது. இவ்வாறு HIV தொடர்ந்து பெருக்கமடைய எமது நிர்ப்பீடன சக்தி குறைவடைந்து செல்லும். இதனால், எமது உடல் நோய்களை எதிர்க்கும் ஆற்றலை இழக்க, பல்வேறு நோய்களும் எமது உடலைத் தாக்கும். இந்நிலையே ‘எய்ட்ஸ்’ (AIDS) எனப்படும்.

‘எச்.ஐ.வி. பொசிட்டிவ்’ எனப்படுவது HIV தொற்று ஏற்பட்டு வெளிப்படையான நோய் அறிகுறிகள் தோன்றும் வரையான

## உலக ‘எய்ட்ஸ்’ தினம் இன்று

காலம். இந்தக் காலப்பகுதியில் தொற்றுக்கு உள்ளானவரை வெளிப்படையாக இனங்காண முடியாது. ஏனெனில், அவர் சாதாரண சுகதேகி போலவே இருப்பார்.

ஆனால், HIV தொற்று ஏற்பட்டவர் தொற்று ஏற்பட்டு ஏறத்தாழ 3 மாத காலத்தின் பின் தனது குருதியை HIV தொற்றுக்கான பரிசோதனை செய்தால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

### எயிட்ஸ் (AIDS)

A - Acquired - (பெறப்படும்)

I - Immune - (நிர்ப்பீடனம்)

D - Deficiency (குறைவதால்)

S - Syndrom (பல்வேறு நோய்களுக்கான அறிகுறிகளின் கூட்டு)

இயற்கையாகப் பெற்ற நிர்ப்பீடன சக்தி குறைக்கப்படுவதால் பெறப்படும் பல்வேறு நோய்களுக்கான அறிகுறிகளின் கூட்டு.

### எச்.ஐ.வி. தொற்றும் வழிகள்

எய்ட்ஸ் நோய்க் காரணியான HIV பின்வரும் வழிகளினூடு மாத்திரமே தொற்றக்கூடியது.

★ HIV தொற்றுள்ள ஒருவருடன் பாதுகாப்பற்ற முறையில் பாலுறவு மூலம் தொற்றலாம்.

★ HIV பரிசோதிக்கப்படாத குருதி மாற்றீடு மூலம் தொற்றலாம்.

★ HIV தொற்றுள்ள நபரின் குருதியுடன் தொடர்புபட்ட எந்த ஒரு உபகரணமும் சுகதேகி ஒருவரின் குருதியுடன் தொடர்புபட்டால் தொற்று ஏற்படலாம்.

★ HIV தொற்றுள்ள தாயிடமிருந்து கருத்தரிக்கும் குழந்தைக்குத் தொற்றலாம்.

இவ்வழிகள் தவிர, பின்வரும் சாதாரண தொடர்புகள் மூலம் HIV தொற்றுவதில்லை.

### தொற்று ஏற்படாத வழிகள்

- ✦ தொடுகை மூலம்.
- ✦ குடும்பத்தில் ஒருவராக வசிப்பதன் மூலம்.
- ✦ நுளம்பு, பூச்சிக்கடி மூலம்.
- ✦ இருமல், தும்மல் மூலம்.
- ✦ ஆடைகளை மாற்றி அணிவதன் மூலம்.
- ✦ நண்பர்களாய் இருப்பதன் மூலம்.
- ✦ ஒரே குளத்தில் குளிப்பதன் மூலம்.

### தொற்றைத் தடுத்தல

HIV எம்மைத் தொற்றாது தடுப்பது மிகவும் இலகுவானது. எமது கலாசாரப் பண்பாடுகளைக் கட்டிக்காத்துக் கண்ணியமாக வாழ்வதே இதில் மிகச் சிறந்த வழி.

✦ ஒருவனுக்கு ஒருத்தி என வாழுதல்.

✦ பலருடனான பாலியல் உறவைத் தவிர்த்தல்.

✦ ஆணுறை (Condoms), பெண்ணுறைகளை (Diaphragm) உரிய வகையில் அணிந்து பாலியலில் ஈடுபடல்.

✦ HIV இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட குருதியையே மாற்றீடு செய்தல்.

✦ புதிய அல்லது சுத்தம் செய்யப்பட்ட ஊசிகளையே பயன்படுத்துதல்.

✦ HIV தொற்றுக்குள்ளான தாய் கர்ப்பம் தரிக்காது இருத்தல்.

### நோயாளியைப் பராமரித்தல்

எய்ட்ஸ் நோயாளியிலிருந்து HIV சாதாரணமான வழிகளில் தொற்றுவதில்லை. எனவே, தயக்கமின்றி நோயாளிகளைப் பராமரிக்க முடியும்.

- ✣ அவரை ஏற்றுக்கொள்ளுதல்.
- ✣ அவரது உணர்வுகளை மதித்தல்.
- ✣ உள நெருக்கீடுகளிலிருந்து விடுபட உதவுதல்.
- ✣ அவர் மீது அன்பு செலுத்துதல்.
- ✣ அவருக்கு ஆலோசனை வழங்குதல்.
- ✣ எதிர்காலத்தை திட்டமிட்டுக் கொடுத்தல்.
- ✣ மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

என்பனவற்றினூடகச் சாதாரண நோயாளியைப் போலப் பராமரிக்கலாம்.

HIV கிருமியை அழித்து எய்ட்ஸ் நோயை மாற்றுவதற்கு இதுவரை எந்த மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, நாம் விழிபபுணர்வுடன் செயற்பட்டு வருமுன் காப்பதே சிறந்த வழி.

### விழிப்புணர்வு

HIV தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற்று எதிர்காலத்தில் சிறந்ததொரு மனித சமுதாயத்தைக் கட்டியெழுப்ப விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களே முக்கியமான தேவையாகும்.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்பன குறிப்பிடக் கூடியளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை துரிதமாக முன்னெடுத்து வருகின்றன.

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் HIV/AIDS தொடர்பான தகவல்களை அடக்கிய அழகான கையேடுகளை அச்சிட்டு மக்கள் கூடும் இடங்களில் விநியோகித்தும், பாடசாலை மாணவர்களிடையே எயிட்ஸ் விழிப்புணர்வு சம்பந்தமான சித்திர, நாடகப் போட்டிகளை நடத்தியும் வருகின்றது. மேலும் வடமராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள இடம்பெயர் முகாம்களில மக்களின் அவசிய தேவைகளை இனங்கண்டு அதனூடு விழிப்புணர்வுத்திட்டத்தை மேற்கொளளத் துரித ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மூன்று ஆண்டுகளாக சமூகத்தின் பல மட்டங்களிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்; ஒளிப்பட வீச்சுக்கள், குழுச்செயன்முறைகள் மூலம் விழிப்புணாவுத்திட்டத்தை மிகச் சிறப்பாக நடைமுறைப் படுத்தி வருகின்றது.

இவற்றைவிடவும் தமிழீழ சுகாதாரப் பிரிவும் பல வழிகளில் பிரசாரங்களையும், “கட்டவுட்களையும்” வழங்கி விழிப்புணர்வூட்டுகின்றனர்.

இரட்சணிய சேவையினர் யாழ்ப்பாணத்தில் AIDS சம்பந்தமான களப்பணிகளில் ஈடுபடுவோருக்கான பயிற்சிப் பட்டறையினையும் நடத்தியுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாண சமூகமேம்பாட்டு நிறுவனமும் தமது உதவியைப் பெறுபவர்களுககு இவ்வாறான விழிப்புணர்வினை ஊட்டி வருகின்றது.

### விழிப்புணர்வின் தாக்கம்

விழிப்புணர்வு நிகழ்வுத் திட்டங்களின் மதிப்பீடு உடனடியான விளைவை ஏற்படுத்தாதது என்பது தெரிந்ததே. அது காலப்போக்கிலேயே பெரிய மாற்றத்தை உண்டுபண்ணக் கூடியது.

எனவே, விழிப்புணர்வு நிகழ்வுத் திட்டங்களில் ஈடுபடுவோர் “மக்களின் மனங்களை” வெல்ல வேண்டும். அதாவது, மனப்பாங்கு மாற்றத்தினூடாக நேரான வாழ்வுக்கு அவர்களை இட்டுச்செல்லவேண்டும்.

இவ்வாறு எயிட்ஸ் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் மக்களின் வாழ்க்கைக் கோலத்தில் சிறப்பான மாற்றத்தை ஏற்படுத்துமானால் எயிட்ஸ் எனும் அரக்கனை எதிர்காலத்தில் முற்றாகவே விரட்டியடிக்க முடியும். ●

**ஆ.ஜென்சன் றொனால்ட்,**
*திட்ட இணைப்பாளர்,*
*HIV/AIDS தடுப்புப் பிரிவு,*
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,*
*யாழ். மாவட்டத் தலைமையகம்.*

## ஜேர்மனியில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வுகளில் இருந்து...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்காக எதனையும் அர்ப்பணிக்க தயார் என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு,டிசெ.1

கல்வியை மேம்படுத்தும் உன்னத காரியத்திற்காக எதுவித அர்ப்பணிப்புகளையும் செய்யத் தாம் தயார் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதற்காகவே 1994ஆம் ஆண்டு விஞ்ஞான பூர்வமான முறையான அடித்தளத்தைத் தாம் ஆரம்பித்ததாகவும் - அவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவ, மாணவியருக்கான அடுத்த ஆண்டிற்குரிய இலவசச் சீருடைகளை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்கொண்டு உரை நிகழ்த்தியபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கல்வித்துறையை மேம்படுத்தும் உன்னத பணிக்காக எந்த அர்ப்பணிப்பையும் மேற்கொள்ளத் தற்போதைய அரசு தயாராக இருக்கின்றது.

இதற்காகக் கூடுதலான நிதியை ஒதுக்குவதற்கும் அரசு விரும்பியுள்ளது. அத்துடன், அமைச்சரவையின் தீர்மானத்திற்கமைய பாடசாலைச் சீருடைகளையும் பாடப் புத்தகங்களையும் அடுத்த ஆண்டு முற்பகுதியிலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான மூலப் பொருள்களை இலங்கையில் உற்பத்தி செய்யும் திட்டங்களும் உள்ளன.

தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தினூடாகப் பிரேரிக்கப்பட்ட சம்பள உயர்வு போதுமானதாக இல்லை.

அடுத்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் ஆசிரியர்களுக்கு உரிய சம்பள உயர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-6)

## 'பவ்ரல்' அமைப்பின் ஏற்பாட்டில் கலந்துரையாடல்

வலி.வடக்கு,டிசெ.1

தென்னாசிய சிறு ஆயுத எதிர்ப்பு அமைப்புகளின் வலைப்பின்னல் அமைப்பும் இங்கிலாந்திலுள்ள சேபர் வேர்ல்ட் அமைப்பும் இணைந்து 'நாடளாவிய ரீதியில் சிறு இலகுரக ஆயுதப் பரம்பலைத் தடுப்பதற்கான தேசிய ஆணைக் குழு' என்னும் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர்.

இக்கலந்துரையாடல் 'பவ்ரல்' அமைபபின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் விசேடமாக அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டும் நடைபெறவுள்ளது. (8-86-202)

## செயலமர்வுகள்

தென்மராட்சி,டிசெ.1

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான தொடருறு செயலமர்வுகள் நாளையும், நாளைமறுதினமும் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை 'நவீன கற்றல், கற்பித்தல் நுட்பங்கள்' என்னும் விடயம் தொடர்பான செயலர்வும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை 'தொடர்பாடல் திறன் விருத்தி' என்னும் விடயம் தொடர்பான செயலமர்வும் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுக்குச் சகல பாடசாலை ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (8-117-202)

## ஊனமுற்றோர் தினவிழா

தென்மராட்சி,டிசெ.1

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை சகல பிரதேச செயலகங்களிலும் ஊனமுற்றோர் விழா கொண்டாடப்படவுள்ளது.

சகல பிரதேச செயலகங்களிலும் ஊனமுற்றோர் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் நிகழ்வுகளை நடத்துவதோடு, பிரதேச பொது அமைப்புகளின் உதவியுடன் ஊனமுற்றோரைக் கௌரவிக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (8-117-202)


## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

மேற்படி வைத்தியசாலை தனது சேவையை மக்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளது.

பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு

ஆய்வுகூட வசதிகள்

※ இரத்தம் ※ சலம்

※ ஸ்கானிங் (SCAN) ※ ECG

நிபுணத்துவ ஆலோசனைகள்

மேலதிக விவரங்களுக்குக் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

☎ 060 221 2533.

(சி-39067)(34-18-46-24) - பணிப்பாளர் சபை.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 ✪ 05 ✪ 1974

உதிர்வு 14 ✪ 12 ✪ 2003

அமரர்

முத்துக்குமாரசுவாமி யோககுமாரன்

(முகாமைத்துவக் கணக்காளர், "பாணட் சொல்றெயர் லிமிடெட் நிறுவனம்", லண்டன்)

திதி: அபரபக்க பஞ்சமி

'சிவத்தொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்'

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
நண்பர்களுக்கு நல்ல நண்பனாய்
சிவதொண்டு செய்வதையே இலட்சியமாய்க் கொண்டு
பார் போற்றும் உத்தமனாய் வாழ்ந்த
எங்கள் அருமைச் செல்வமே! நீ மறைந்து
ஆண்டொன்று சென்றாலும் உன் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது
நின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி!

தகவல்: குடும்பத்தினர், 33 1/1, Arethusa Lane, Colombo - 06.

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்: குடும்பத்தினர்.

(சி-39337) (24-18-46)



## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



பூலோகம் 07 ✳ 07 ✳ 1946

வைகுந்தம் 01 ✳ 12 ✳ 1997

அமரர்

சீனியர் இராசரத்தினம்

(நிற்சாமம், சங்கானை)

"தந்தை மகற்காற்றும் நன்றி – அவயத்து முந்தியிருப்பது செயல்"

சிந்தையிலே இனித்திருக்கும்
உன் சிரித்த முகம் எங்கே?
சொந்தமும் பந்தமும்
தேடும் உறவிங்கே
உந்தன் சிறகுகள்தான் ஒடிந்தனவோ?
உயிர்த்துடிப்புத்தான் ஒய்ந்ததுவோ?
உந்தன் இதயம் ஒருமுறை துடிக்காதோ?
ஏங்கும் எமது குரலைக் கேட்காதோ?
உம் பிள்ளைகளுடன் இருள் வெள்ளத்தில்
திசை தெரியாது தவிக்கின்றேன்!
★
எங்கள் உணர்வுக்குள் உறைந்திருக்கும் அப்பாவே!
ஏழு ஆண்டென்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் – நாம் எங்குதான்
நின்றாலும் எவருடன் சேர்ந்தாலும்
உம் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிற்சாமம் சங்கானை.

தகவல்: இராசரத்தினம் யோகன் (மகன் - சுவிஸ்).

(சி-39365) (24-18-46)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 06 ✦ 08 ✦ 1952

இறப்பு 01 ✦ 11 ✦ 2004

அமரர் செல்லையா வேலையா

(வெள்ளைக்குடா)

அன்போடும் பாசத்தோடும் எம்மோடிணைந்து
பண்போடு வாழ்ந்த உத்தமரே! நீங்கள்
மறைந்து போனாலும் உங்கள் நினைவு மறையாது!
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

இன்று (01.12.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன் நினைந்து வாழும்:

திருமதி வே.கிருஷ்ணவேணி (மனைவி),
சத்தியகாந்தன் (மருமகன் - லண்டன்)
ஜெசிந்தா (மகள் – லண்டன்), பிரதீபா (மகள் – வவுனியா பல்கலைக்கழகம்),
ராஜ்குமார் (மகன் – கனடா), சந்துரு (மகன் – யூனியன் கல்லூரி).

புகையிரத வீதி, சுன்னாகம்.

(38798) (24-18-46)



## செய்மதி தொலைக்காட்சி!

செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் TV துறைகளில் இலங்கை முழுவதும் மிக நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி வரும் Sats - Tech நிறுவனம் தனது சேவையை இலங்கை முழுவதும் NORTH LANKA TELEVISION NET WORK (NLT NET WORK) என்னும் பெயரில் விஸ்தரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது. இலங்கையில் அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் (Fiber Optical Technology)கேபிள் TV இயக்குநர்களின் இன்னல்களுக்குத் தீர்வை வழங்கிவருகின்றோம். யாழ். மாவட்டத்தில் எமது Fiber Optical MSOவில் இணைந்து பயன்பெற உடன் தொடர்புகொள்ளவும். மேலும் KU band, C BAND Dish அன்ரனாக்கள், ரிசீவர்கள், மொடலேட்டர்கள், அம்பிளிவயர், வயர் Tapoff முதலான அனைத்து உபகரணங்களும் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

SATS - TECH ENGINEER'S

M/S நஷனல் வீடியோ சென்ரர்

(குளப்பிட்டி சேர்ச் அருகில்)

No. 182, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

Phone: 021 222 5908 / 077 6618580 / 0777 251957

Hot Line: ISLAND wide: 0777 710785

SAHARA TV · BBC WORLD · Hallmark · FASHION TV · Bloomberg · AXN

(39067) (24-18-46)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆற்றல்களை வெளிப்படுத்திய விவாதச் சுற்றுப்போட்டி!

தீபாவளி தினத்தையொட்டி மாவை சிவ நாதம் பட்டிமன்றக்குழுவினர் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விவாதச் சுற்றுப போட்டியொன்றினை நடத்தியிருந்தனர்.

இந்த விவாதச் சுற்றுப்போட்டிகள் யாவும் கடந்த 7 ஆம் திகதி மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன. இப்போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் பல பங்குபற்றியிருந் தன.

சுற்றுப்போட்டிகள் யாவும் இரண்டு, மூன்று சுற்றுக்களாக ஒரு விவாத அணியில் மூவர் என்ற அடிப்படையில் நடத்தப்பட்டது.



விவாதச்சுற்றுப் போட்டியின் பிரகாரம் நடு வர்களின் தீர்ப்பின்படி கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 3 ஆம் இடத்திற்குத் தெரிவாகி யது. இறுதிப் போட்டி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இணுவில் இந்துக் கல்லூரிக்கும் என இவர்களுடைய வாதத்திறமையின் பிரகாரம் தெரிவாகின.

இறுதிப்போட்டிகள் யாவும் தீபாவளி தினத் தன்று மாலை 3 மணியளவில் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் பரிசளிப்பு விழா வில் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற றது. நிகழ்வுகளில் மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், அகவணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து விவாதப் போட்டி ஆரம்பமானது.

விவாதப் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான வேம்படி மகளிர் கல்லூரியின் விவாத அணியின் தலைவியான மாளவிக்கா மற்றும் தயானா, காயத்திரி ஆகியோரும் இணுவில் இந்துக கல்லூரியின் அணித்தலைவர் போல்அன்ரன் மற்றும் ரஜீவன், நிரோஷ் ஆகியோரும் அங் கம் வகித்தனர்.

போட்டியில் 'இருபத்தொராம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் சக்தி தமிழ்மொழிககு உண்டு/இல்லை' என்கின்ற விடயம் கொடுக்கப் பட்டது. இதில் உண்டு என்கின்ற வகையில் வேம்படி மகளிர் கல்லூரி விவாத அணியும், இல்லை என்ற கருத தொனியில் இணுவில் இந்துக் கல்லூரி அணியும் வாதிட் டனர்.

உண்மையில் இரண்டு அணியினருக்கும் இடையில் விவாதப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் சபை யில் இருந்தவர்கள் மிகவும் வியப்புடனும், ஆச்சரியத்துட னும் பார்த்தார்கள். எமது யாழ்.மாவட்டப் பாடசாலை களில் இப்படியான விவாதத் திறன் மிக்க இளம் மாணவ சமுதாயம் இருக்கின்றதா? என்ற வினாக குறியுடன் தான் சபையிலுள்ளவர்கள் பார்வை தென்பட்டது.

இணுவில் இந்துக் கல்லூரி அணியின் தலை வர் போல்அன்ரன் தனது ஆழமான கருத்துக் களை முன்நிறுத்தி ஒரு முதிர்ந்த பேச்சாளன் போல் தன்னை அடையாளப்படுத்தியதுடன் தனது அணிக்கு வலுவான வாதங்களை முன்வைத்தார். இரண்டாவது பேச்சாளன் ரஜீவன் தனது துடிப்பான, அடுக்கான வசனங்களுடன் வெட்டியும், ஒட்டியும் தனது கருததுக்களை நிறுத்தி வலுச் சேர்த்தான். அடுத்து வாதிட்ட நிரோஷ் ஒரு வித்தியாசமான விவாதி யென்றுதான் கூறவேண்டும். எதிர்த்தரப்பினர் முன்வைக்கின்ற கருததுக்களைத் தகர்த்தெறிந்து அவ்விடத்தில் தனது கருத்தை தக்கவைக்கும் ஆளுமை அவரிடம் இருந்தது.

வேம்படி மகளிர் கல்லூரியின் அணித்தலைவி மாளவிக்கா ஓர் துடிப்பான விவாதி. அறிவியல் ரீதியான கருத்துக்களையும், ஆழமானதும் தனது அணிக்கு வலுச் சேர்ப்பதுமான கருத்துககளை யும் முன்வைததார். இவர் எதிர்காலத்தில் ஒரு சிறந்த பேச்சாளராக வருவார் என்பதில் ஐய மில்லை. இந்த அணியில் அடுத்ததாகப் பேசிய செல்வி தயானா மற்றும் காயத்திரி ஆகியோர் மிகவும் சிறந்த பேச்சாளர்களாக வாதிட்டனர். தமிழை நனகு உச்சரித்து நாகூக்காகத் தமது கருத்துககளை முன்வைத்தனர்.

இவ்வாறு இரண்டு விவாத அணியினரும் சரமாரியாக வாதக்கணைகளைத் தொடுத்தனர்.

நடுவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் இணு வில் இந்துக்கல்லூரி முதலிடம் பெற்றது. இணு வில் இந்து விவாத அணியின் சிறந்த பேச்சாள ராக செல்வன் நிரோஷ் தெரிவுசெய்யப்பட்டார். வேம்படி விவாத அணி சார்பாக செல்வி மாள விக்கா தெரிவு செய்யப்பட்டார்.

மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழுவின் அமைப்பாளரும், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமாகிய சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் தலைமையில் தொடர்ந்து நிகழ்வு கள் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு பிரதமவிருந தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய துடன் வெற்றிக்கேடயங்களை வெற்றிபெற்ற விவாத அணிக்கு வழங்கிக் கௌரவித்தார்.

முத்தமிழ் குருமணி சர்வேஸ்வரக்குருக்கள் ஆசியுரையினையும், இராமநாதன் கல்லூரி அதி பர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் வாழ்த் துரையினையும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்



கல்லூரியின் ஆசிரிய கவிஞர் பார்வதிநாதசிவம் மகாலிங்கசிவம் கருத்துரையினையும் வழங்கி னர். விவாதத் தொடர் சுற்றுப்போட்டியின் சிறந்த பேச்சாளராகக் கொக்குவில் இந்துக்கல்லூரி விவாத அணியைச் சேர்ந்த நி.பகீரதன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த விவாதச் சுற்றுப்போட்டியின மூலம் எமது இளம் மாணவ சமுதாயத்தில் எத்தகைய விவாதத்திறன் மிக்கவர்கள் இருக்கிறார்கள் என்பதை எடைபோட முடிந்துள்ளது. எது எவ்வாறா யினும் இன்றைய எமது மாணவ சமுதாயம் வழி

**தொகுப்பு:எஸ்.கஜன்**

மாறிச் செல்வதையும், எமது கலை, கலாசாரச் சீரழிவுகளிலிருந்து மாணவ சமுதாயத்தைத் தடுக்கவும் இவவாறான போட்டிகள் உதவும் என்று எண்ணுகிறோம் இந்தப் பணிமென் மேலும் தொடர வேண்டும். ☆

## கலைச்சுடர்



தயாரிப்பு: தீபா

# “.....பலரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் நாட்டுக்கூத்தை வளர்த்தவர்கள் வட்டுக்கோட்டை மக்கள்......”

கலாபூஷணம் விருது பெற்ற நாட்டுக் கூத்துக் கலைஞர் வட்டுக்கோட்டை கந்தையா நாகப்பு அவர்களுடனான செவ்வி இங்கு தொகுத் துத் தரப்படுகின்றது.



❒ கேள்வி: நாட்டுக் கூத்துக் கலையில் ஈடு பாடு ஏற்பட்டது பற்றி.

○ பதில்: அக்காலத்தில் காந்திஜி சனசமூக நிலையக் கிராம முன்னேற்றச் சங்கம் தனக் கென ஓர் கட்டடமின்றி இருந்ததுடன், பொருளா தாரத்திலும் பின்னடைவு கண்டிருந்தது.

மேற்படி சங்கத்தின் தலைவராக இருந்த இராச வைத்தியர் அ.க.குமராசாமி அவர்களின் சம் மதம் பெற்று, எழுத்தாளர் அகிலன் அவர்களு டைய 'நெஞ்சின் அலைகள்' நாவலை நானும், நா.தணிகாசலம்பிள்ளை அவர்களும் வசனம் அமைத்து, அன்றிருந்த இளைஞர்களாகிய நாம அந்நாடகத்தை மேடையேற்றி மிகுந்த பாராட் டைப் பெற்றுக்கொண்டதுடன், அந் நாடகத்தால் கிடைத்த மிகுதிப் பணத்தையும் சங்கத்திற் குக் கொடுத்து உதவினோம்.

நல்லதம்பி நாடக சபாவைச் சேர்ந்தவர்கள். எமது மூதாதையர் போற்றிப் பாதுகாத்து வந்த நாட் டுக் கூத்து கவனிப்பாரற்ற நிலையிலிருப்பதைக் கண்டு அக்கலைக்குப் புத்துயிர் அளிக்கவும், சங்கத்துக்கென ஓர் கட்டடம் அமைக்கவும் எண ணம் கொண்டு வம்சாீதியாக ஆடி வந்த கூத்தை வம்சாீதியாகக் கொடுக்கத் திட்டமிட்டு, என்னை நாடிவந்து வீமன் பாத்திரத்தை ஏற்கும் வண ணம் கேட்டார்கள். கிராமத்தின் நன்மை கருதி நானும் சம்மதித்தேன். வட்டூர் மக்களின் இரத்தத தில் ஊறிய கலைப் பொக்கிஷம் தருமபுத்தி ரன் வடமோடி நாட்டுக் கூத்துப் பாத்திரங்களின் தன்மைக்கு ஏற்ப பொருத்தமான ஆட்சேர்ப்பு. இதுவே என் நாட்டுக் கூத்துக் கலையின் முதல் அடிக்கல் எனலாம்.

❒ கேள்வி: நாட்டுக் கூத்துக் கலைக்கு நாட்ட மில்லாத காலத்தில் ஈடுபட்டதற்கான காரணம்? உங்களுடைய மூதாதையர்கள் எவராவது நாட் டுக்கூத்தில் ஈடுபட்டார்களா?

○ பதில்: கி.பி. 1960 ஆம் ஆண்டு வரையும் கூத்தையும் கூத்து ஆடுவோரையும் இழிவுபடுத்தி வந்த காலம் ஒன்றிருந்தது. வட்டூர் மக்கள் பல ஆண்டு தொடக்கம் இன்று வரையும் பலரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் கூத்தைப் புறக்கணிக் காது ஆடிவந்திருக்கின்றார்கள். காரணம் அக்கலை யின் பேரில் கொண்டிருந்த ஆர்வமேயாகும். வீமன் கந்தர் என்னுடைய பூட்டன் இவரே முதல முதல் 'தருமபுத்திரன்' என்னும் வடமோடி நாட டுக் கூத்தில் வீமனாகப் பாத்திரமேற்று ஆடியுள ளார்.

விராட நாடகத்தில் என்னுடைய பெரிய தந்தை நாகர் ஆறுமுகமென்பவர் மடையனாக (வீமனாக) ஆடியுள்ளார். அந்த வரிசையில் நானும் வீமனாக ஆடிவருகின்றேன்.

❒ கேள்வி: வட்டுக்கோட்டையில் எத்தனை யாம் ஆண்டு நாட்டுக் கூத்து ஆரம்பிக்கப்பட்டது? இதற்கு முன்னோடியாக செயற்பட்டது யார்?

○ பதில்: வட்டுக்கோட்டையில் முதலில் தென மோடிக் கூத்துத்தான் ஆடப்பட்டு வந்ததாகச் சொல்லக் கேட்டிருக்கின்றோம். கி.பி.1765 இற்கும் 1824 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமிநாதபண்டிதர் அவர்கள். இவரே தான் பாடிய 'தருமபுத்திரன்' நாடகமென்னும் வடமோடி நாட்டுக்கூத்தை வட்டுக கோட்டைக்குக் கொண்டுவந்தவராவார்.

இவரிடமிருந்து வேலுப்பிள்ளை - கணபதியார் என்னும் மத்தள வல்லுநர் தருமபுத்திரன் நாடகத தைப் பெற்று நம்மவருக்குப் பழக்கினார் என அறிகின்றோம்.

❒ கேள்வி: நாட்டுக் கூத்தில் ஈடுபட்ட உங் களின் வளர்ச்சி பற்றியும் எத்தகைய கதாபாத் திரங்களில் நடித்துள்ளீர்கள் எனவும் கூறுவீர் களா?

○ பதில்: நாட்டுக் கூத்தில் ஈடுபட்ட காரணத் தால் கூத்தைப் பல இடங்களில் ஆடிக் காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதில் திரு மறைக் கலாமன்றமும் ஒன்று திருமறைக் கலா மன்றத்தின் கருத்தரங்கில் 'நாட்டுக் கூத்துக் கலைக் களஞ்சியம்' ஒன்று. எழுதத் திட்டமிடப் பட்டது. சுமார் நாற்பது கேள்விகளுக்கு விடை தரும் வண்ணம் என்னைக் கேட்டுக்கொண்டனர்.

இந்தச் செயற்பாடே நாட்டுக் கூத்தைப் பற்றி அறியவும், ஓர் நூலாக எழுதி நாமே வெளியிட வேண்டுமென்ற [illegible]

நான் நடித்த [illegible] பாத்திரங்களை சொல்லவேண்டுமானால் தருமபுத்திரன் நாடகத் தில் வீமன், மாயவிரதசாரணியாவும் - விராட நாடகத்தில் மடையனாகவும் (வீமன்) - குருக்கேத திரன் நாடகத்தில் வீமன் + கிழவியாகவும் நடித்த துள்ளேன்.

❒ கேள்வி: வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவின் வளர்ச்சி பற்றியும், என்ன என்ன நாட்டுக் கூத்துக்கள் மேடையேற்றப்பட் டன, பெற்ற பாராட்டுக்கள் பரிசுகள் பற்றியும் விளக்கமாகக் கூறுங்கள்?

○ பதில்: வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபி விருத்திக்குழுவின் வயது (1960 - 2004)நாற் பத்தி நான்காகின்றது. எமது கண்களுக்கு முன்னால எத்தனை எத்தனையோ நாடக மன்றங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. வட்டூர் நாட்டுக் கூத்து தலைமுறை தலைமுறையாக வளர்நது கொண்டே இருக்கின்றது.

ஆடல் அரங்கு கண்ட முழுக்கூத்துக்கள் மூன்று:

1.தருமபுத்திரன் நாடகம் (வடமோடி நாட் டுக் கூத்து)
2.விராட நாடகம் (வடமோடி நாட்டுக் கூத்து)
3.குருக்கேத்திரன் நாடகம் (வடமோடி நாட் டுக் கூத்து)

சான்றிதழ், முதலிடம் என்பன பற்பல இடங களில் பெற்றிருக்கின்றது. அவற்றையெல்லாம் கூறத தனியான ஒரு பக்கத்தை ஒதுக்க வேண்டும்.

❒ கேள்வி: வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து



அபிவிருத்திக் குழுவினரால் மேடை ஏற்றப்பட்ட நாட்டுக் கூத்துக்களில் எத்தனை கூத்துக்களில் நடித்துள்ளீர்கள்? இதில் பிடித்த பாத்திரம்?

○ பதில்: தருமபுத்திரன் நாடகம், விராட நாடகம், குருக்கேத்திரன் நாடகம் இவற்றினுள் முறையே வீமன், அனுமன் போர், மல்லன் மடை யன் போர், சடாசூரன் வீமன் போர் முக்கியமானது. இம் மூன்று கூத்துக்களைச் செய்வோர் வசதியாக [illegible] திறமைமிக்கவர்களால் ஆடப [illegible] மையினாலும், கோயில் மேளமாக எடுத்த தெல்லாததுக்கும் இவை போடப்பட்டதனாலும் எத்தனை தரம் ஆடலரங்கு ஏறியது எனக் கணக் கில் வைத்துக்கொள்ளவில்லை.

நாம் ஆடிய மூன்று கூத்துக்களுக்குள் எந் தக் காட்சி, எந்தப் பாத்திரம் எனக்குப் பிடித் தது என்று கேட்டால்... எனக்கு விருப்பமானது: தருமபுத்திரன் நாடகத்தில் கீசகன் துருபதியி டம் தன் காமவிகாரத்தைப் போக்க வரும்படி கேட்கும் இடமேயாகும். அக்காட்சிக்குரிய பாட் டுக்கு ஆடும் பாங்கு எனக்குக் கைவந்த கலை யாகும்.

❒ கேள்வி: ஆரம்ப கால நாட்டுக் கூத்தைப பற்றியும், தற்போது மேடையேற்றப்பட்டு வரும் நாட்டுக் கூத்துக்களைப் பற்றியும் விளக்கமாகக கூறவும்?

○ பதில்: இக்கேள்விக்கு மிக மிகச் சுருக்க மாக விடை தருகின்றேன். ஆரம்பகால நாட்டுக கூத்தைப் பற்றி அறிய வேண்டுமாயின், எமது மூதாதையர் ஆடிய கூத்தை எடுத்துக் கொள்ள லாம். தற்போது மேடையேற்றப்பட்டுவரும் நாடக மேடைக்கூத்தைபற்றி அறிய வேண்டுமாயின் திரு மறைக்கலாமன்றம் போட்டுக் காட்டும் கூத்தைப் பார்க்கலாம்.

❒ கேள்வி: வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்துக்களைப் பற்றியும் இரண்டுக்கும் இடையே யுள்ள வித்தியாசம், தொடர்பு பற்றியும் விளக்க மாகக் கூறவும்?

○ பதில்: இன்று நாட்டுக்கூத்தைப் பற்றி எழுதும் எழுத்தாளர் மத்தியில் எழுந்துள்ள மிகப பெரிய பிரச்சினை இது.

வடமோடி என்பது எது?
தென்மோடி என்பது எது?

வடமோடிக்கூத்தை 'வடமோடிச்சாயலுள்ளது' என்றும் 'வடமோடிக்கு அண்மித்துள்ளது' என்றும எழுதுகின்றார்கள் பேராசிரியர்கள். வடமோடிக் கூத்தை தென்மோடிக்கூத்து என்பாருமுளர். வட மோடியோ, தென்மோடியோ இல்லாத மூன்றாம தரமான இசை நாடகத்தை தென்மோடி என ஒப புச் கொள்கின்றார்கள் தற்பொழுது நான் எழுதிக் கொண்டிருக்கும் கூத்து நூலில் இவ்விடயம் ஆரா யப்படுவதால் இங்கு அவற்றிற்கான விளக்கத் தைக் காட்ட விரும்பவில்லை.

❒ கேள்வி: நீங்கள் நாட்டுக்கூத்து நடிகன் மட்டுமல்லாது நாட்டுக்கூத்துத் தொடர்பான எழுத தாளன் என்றும் அறிகின்றேன். உங்களுடைய எழுத்துத்துறை பற்றியும் எழுதிய நூல்கள் பற்றி யும் விவரமாகக் கூறவும்?

○ பதில் நான் படிக்கின்ற காலங்களில் பழைய கதைகளை முதியோரிடம் கேட்பேன். மிகுதி நேரங்களில் கதைகள் வாசிப்பேன். பாடசாலை யில் கதை எழுதும்போட்டி ஒன்றை எமது வகுப பாசிரியர் ஏற்படுத்தினார். நான் எழுதிய கதை முதற்பரிசு பெற்றது. எனக்குக் கிடைத்த பரிசு ஓர் புத்தகம். அப்பரிசுப் புத்தகம் இன்றும் என் கையில் இருக்கின்றது. அப்புத்தகத்தின் பெயா 'தமிழ்முழக்கம்'. பன்மொழிப்புலவர் திரு.கா.அப்

**செவ்வி: கதிர்.**

பாததுரை அவர்கள் எழுதியது. வட்டுக்கோட் டைப் பாரம்பரிய கூத்து நூல் எழுத பெருமளவில் உதவியிருக்கின்றது அந்நூல். மேலும், வகுப் பில் நடந்த கதைப்போட்டி நாவலையே நான் 'ஏழையின் காதல்' என்ற நூலாக்கினேன் 1959 இல், அதனை அடுத்து 'காதலும் விளக்கமும்' என்ற கட்டுரை நூலை 1960 இல் வெளியிட்டேன.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுத் தபால்பொதிகள் அபகரிப்பு; கொழும்புத் தபாலக ஊழியர் 12 பேர் கைது!

கொழும்பு,டிசெ.1

கொழும்பு மத்திய தபால்நிலையத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் வெளிநாட்டுத் தபால்பொதிகள் அபகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள தபால் ஊழியர்களின் வீடுகளைச் சோதனைக்கு உட்படுத்தியபோது அவர்களின் வீடுகளில் இருந்து தபால்பொதிகள் மீட்கப்பட்டன. இதனை அடுத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என குற்றப்புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் மூன்று உயர் அதிகாரிகளும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படுகின்ற பொதிகள் கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து எடுத்துவரப்படும் வழியில் இவ்வாறான முறைகேடுகள் இடம்பெற்று வருவதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்படையில் இருந்து தப்பிவந்த ஒருவரே தபால் ஊழியர்களுடன் இணைந்து இந்தக் குற்றச்செயலைப் புரிந்துள்ளதாகவும் - அவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் - இந்தப் புலனாய்வுப் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (எ-6)


வடக்கு/கிழக்கு புற்றுநோயாளர் உதவி மையத்தின் (Cane-UK)

## இம்மாதத்திற்கான இரண்டு இலவச சேவைகள்

இலவச சேவை 1

**இருபாலாருக்குமான வாய்ப்புற்றுநோய் மருத்துவ முகாம்**

நாள்: 03.12.2004 வெள்ளி காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை.

இடம்: 69, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

அடிக்கடி வெற்றிலை போடுவோர், குதப்பிய வெற்றிலையைப் பல மணிநேரம் வாயில் வைத்திருப்போர், தொடர் புகைபிடிப்போர், மதுவிற்கு அடிமையானோர், இவர்கள் வாயில் அகற்றவியலாத வெள்ளைப் படிமங் கண்டவர்கள், வாயில் மாறாத புண், வலி, சீழ், இரத்தம் கண்டவர்கள் தவறாது கலந்து ஆரம்ப அறிகுறிகள் உள்ளனவா எனக் கண்டறிந்து சிகிச்சை பெறுமாறு அழைக்கின்றோம்.

சேவை 2: வழமைபோல இம்மாதத்திற்கான இலவச பெண்களுக்கான மருத்துவ முகாம்

நாள்: 02.12.2004 வியாழன் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3 மணிவரை.

புற்றுநோய் கண்ட மற்றும் சந்தேகங்கொண்ட பெண்கள் எமது மருத்துவக் குழு மூலம் இலவச சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- தி.ஸ்ரீ.கணேசராஜா
(39125)(34-15-17) ஒருங்கிணைப்பாளர் - Cane-UK நிறுவனம்.


## துயர் பகிர்கின்றோம்

எமது சக உத்தியோகத்தர்
திருமதி **பூரணச்சந்திரா ராம்குமாரின்** அன்புத் தாயார்
திருமதி **நேசபூபதி முத்துக்கிருஸ்ணர்**

காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம். உதவிப் பதிவாளர் நாயகமும். காணிப் பதிவாளரும். (39122)(34-15-45) மேலதிக மாவட்டப் பதிவாளரும். யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது சக உத்தியோகத்தர்
திருமதி பூரணச்சந்திரா ராம்குமாரின் அன்புத் தாயார்
திருமதி **நேசபூபதி முத்துக்கிருஸ்ணர்**

காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலக நலன்புரிச் சங்கம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
(39121)(34-15-45)

## துயர் பகிர்வு



எமது பாடசாலை ஆசிரியர்
திரு. ச.இராஜேஸ்வரனின் அன்புத் தந்தையார்
**முருகேசு சுப்பிரமணியம்**

அவர்கள் 28.11.2004 ஞாயிறன்று காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினரின் துயரைப் பகிர்ந்து, எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள்,
யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்.
(39103)(34-15-45)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 22 | 26 |
| 03 | 11 |
| 1941 | 1991 |

அமரர் **செல்லத்துரை கனகசபாபதி**

(முன்னாள் உதவி அரச அதிபர், ஒட்டுசுட்டான்)

திதி: 01.12.2004

அன்போடும் பண்போடும் ஆதரவாய் அரவணைத்து
என்றுமே இன்சொல் பேசி எம்முடன் வாழ்ந்திட்டீர்!
இன்றோடு பதின்மூன்று ஆண்டுகள் நீர் மறைந்து
ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள்.
(39123)(34-15-45)

## "....பலரின் எதிர்ப்புக்கு....

(9ஆம் பக்கம் பார்க்க)

எனது எழுத்துத்துறையை வளர்க்க அன்றைய குடும்பச் சூழலும் இடந்தரவில்லை. அன்று கதை எழுதும் பாணி வேறு, இன்று எழுதும் பாணி வேறு. இருந்தும், வட்டூர்க் கிராமத்தில் முதன் முதல் நாவல் எழுதிய பெருமை என்னைச் சாரும் 'ஏழையின் காதல்' புத்தகம் ஒன்று யாழ்பல்கலைக்கழக நூல் நிலையத்தில் இருப்பதாக அறிகின்றேன்.

❒ கேள்வி: இளைய தலைமுறையினரை நாட்டுக் கூத்தில் ஈடுபடவைக்க என்ன செய்ய வேண்டும்?

❍ பதில்: பண்டைய தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் இனி வரும் நமது இளந் தலைமுறையினரை ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டுமாயின் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பாடத்திட்டமாக மாத்திரம் அமையாமல் செய்முறைப் பயிற்சியாகவும் பாடத்திட்டம் அமைந்தால் இளம் தலைமுறையினர் கலைகளில் நாட்டமுள்ளவர்களாக இருப்பார்கள்.

❒ கேள்வி: இலங்கையில் நாட்டுக் கூத்துகள் எந்த எந்த இடங்களில் சிறப்பாக மேடையேறறப்படுகின்றன?

❍ பதில்: தமிழீழத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் கடற்கரையை அண்டி வாழும் மக்களால்தான் கூத்துகள் நடத்தப்படுகின்றன.

இக்காலகட்டத்தில் கூத்துகளைச் சமய அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கலாம்.

1. இந்து சமய மரபுடன் தொடர்புடைய கூத்துகள்
2. கத்தோலிக்க சமய மரபுடன் தொடர்புடைய கூத்துகள்

இந்து சமய மரபுடன் தொடர்புடைய கூத்துக்களை வட்டுக்கோட்டை, சுழிபுரம், பெரியபுலோ ஆகிய இடங்களில் பார்த்திருக்கின்றேன்.

கத்தோலிக்க மரபுடன் தொடர்புடைய சில கூத்துகளைத் திருமறைக் கலாமன்றத்தில் பார்த்திருக்கின்றேன்.

பேராசிரியர் திரு.சு.வித்தியானந்தன் அவர்கள் முதற்கொண்டு திருமறைக் கலாமன்ற இயககுநர் அருட்திரு.நீ.மரியசேவியர் அடிகளார் ஈறாக நாட்டுக் கூத்துக்கு 'புதுவடிவம் கொடுக்க வேண்டு' மெனவும் காலத்தின் தேவைக்கேற்ப அதற்கு மெருகூட்டுவதும் படித்தவர், பாமரர் தொடக்கம் இரசிக்கும் அளவிற்கு அதை நவீனமயப்படுத்துவதும் பழைமையைப் பேணிக் கொண்டே புதுமையைப் புகுத்தி அதை அழிய விடாமல் பாதுகாப்பதுமே தமது நோக்கமாக இருக்கின்றார்கள்.

இவர்களா பண்டைய தமிழர்களின் பாரம்பரிய நாட்டுக்கூத்தை அழியவிடாது பாதுகாக்கின்றார்கள். ★


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

**WPHK** தொடரிலக்கமுடைய புதிய ஹீரோ கொண்டா **Passion** மோட்டார் சைக்கிள் (6000Km ஓடியது) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: A.G.செல்வம்,
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (39127)

## ஞானக்குழந்தை கல்விக்கழகம்

19, சிவன் வீதி, திருநெல்வேலி

ஆங்கிலமொழி மூலமான வகுப்புகளுக்கு யாழ்.நகரில் தனித்துவம் வாய்ந்த கல்வி நிலையத்தில் அனுபவமும் தேர்ச்சியும் மிகுந்த ஆசிரியர்களினால் தரம் 6,7,8 வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்: இன்று [illegible] மணி

- இயக்குநர்.
(39116)


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் சக ஆசிரியை
திருமதி **தயாபரி சூரியகுமாரன்** அவர்களின்
அன்புத் துணைவர்

**ஆறுமுகம் சூரியகுமாரன்**

(சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் - வ.பி.போ.ச. - கோண்டாவில்)

அவர்கள் 28.11.2004 அன்று திடீர் மறைவுற்றதைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்றுக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர். உபஅதிபர். ஆசிரியர். மாணவர்கள். கல்விசாரா ஊழியர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம். பழைய மாணவர் சங்கம்.
**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.**
(39124)(34-15-17)

## ஈர விழிகளுடன் மூன்றாண்டு நினைவில்...



அமரர். இ. சந்திரமௌலீசன்

(இளைப்பாறிய பிரதம எழுதுநர், நகரசபை, சாவகச்சேரி)

எம் குடும்பத்தின்
முகவரி தந்த சூரியனே
நீள நினைந்திருப்போம்

(திதி : 01.12.2004)

(சரசாலை தெற்கு, சாவகச்சேரி)
குடும்பத்தினர்


## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் உரிய ஆவணங்களுடன் தொடர்புகொள்ளவும்.

★ கணக்காளர், வரவேற்பாளர் (பெண் - கணனியில் பணியாற்றக் கூடியவராகவும், ஆங்கில அறிவுடையவராகவும் இருத்தல் அவசியம். (Accounting & Receptionist).

★ கணனியில் படத்தொகுப்பு செய்பவர் (வீடியோ மற்றும் பத்திரிகை வடிவமைப்புத்துறையைச் சேர்ந்த ஆண் அல்லது பெண் (Video Editing & DTP).

★ யாழ். குடாநாடு எங்கும் பொருள்கள் விநியோகம் செய்வதற்கான வாகனம் சாரதியுடன் ஒப்பந்த அடிப்படையில். இதற்கான விலைகோரல் விண்ணப்பங்கள் (Transport Service)

உங்களது விண்ணப்பங்களை (பத்திரிகைக் காரியாலயத்திற்கு) அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இலக்கம் 2446,**
(சி-39385) **C/O உதயன், யாழ்ப்பாணம்.** (34-15-45)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகேந்திரம் சிறிரஜனி



மத்தொனி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமாகிய திருமதி யோகேந்திரம் சிறிரஜனி அவர்கள் (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தசாமி - சின்னம்மா தம்பதியினரின் புதல்வியும் யோகேந்திரத்தின் அன்பு மனைவியும் அபிநயாவின் தாயாரும் சிறிரங்கநாதன், சிறிரகுநாதன், சிறிரஞ்சிதநாதன், சிறிரஞ்சினி, சிறிரஞ்சனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னத்துரை (சின்னமாமா), காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற செல்லையா மற்றும் தெய்வானையின் மருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் பொன்னம்மா, புவனேஸ்வரி, செல்லம்மா, இராசம்மா ஆகியோரின் பெறாமகளும் ஜீவறாணி, வளர்மதி, இராஜேஸ்வரி, இராசரத்தினம், மகேந்திரராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2004) புதன் கிழமை லண்டனில் நடைபெறும். அதேவேளை, மத்தொனி, கரவெட்டியில் அவரது இல்லத்திலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்தொனி தெற்கு,
கரவெட்டி.
தகவல்:
இ.மகேந்திரராஜா (மைத்துனர்).
(39114)(29-34-15-45)

### இரத்தினசிங்கம் ஞானசோதி (ஞானம்)



உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவரும் ஜேர்மனியில் வசித்தவருமான இரத்தினசிங்கம் ஞானசோதி அவர்கள் 24.11.2004 புதன்கிழமை இரவு உரும்பிராயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இராசையா - திலகமணி தம்பதிகளின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயந்தி (ஜேர்மனி), ஆனந்தி (ஜேர்மனி), வின்சன் (கனடா), சாந்தி (கொழும்பு), நிமல் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் பாஸ்கரன் (ஜேர்மனி), சசிதரன் (ஜேர்மனி), நிறைஞ்ஜினி (கனடா), நிஷாந்த் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் பிரசாந்த், ஜெயசாந்த், ஜெனோசாந்த், ஜெயானி, சுஜீவன், அஜந்தன், சுஜானி, றனா ஆகியோரின் பேரனாரும் பரஞ்சோதி, ஜெயசோதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் லோகதாஸ் (லண்டன்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (01.12.2004) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
தகவல்:
(39111)(43-34-15-45) வின்சன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான

# மினி ஒலிம்பிக்கில் யாழ்.பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது

கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 180 வீர,வீராங்கனைகள் இப்போட்டியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தடகளப் போட்டிகளில் நான்கு தங்கப் பதக்கங்களையும் ஆறு வெள்ளிப் பதக்கங்களையும் ஆறு வெண்கலப் பதக்கங்களையும் யாழ்.பல்கலைக்கழக வீரர்கள் பெற்றுக்கொண்டனர்.




தங்கப் பதக்கங்களை நீளம் பாய்தல், கோலூன்றிப் பாய்தல் ஆகியவற்றில் எஸ்.றஞ்சித்குமாரும் -

400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் பி.கிருபானந்தனும் உயரம் பாய்தலில் என்.கிசோக்குமாரும் பெற்றுள்ளனர்.

உயரம் பாய்தலில் 1.94 மீற்றர் தூரம் பாய்ந்து என்.கிசோக்குமார் புதிய சாதனையைப் படைத்துள்ளார். தடி ஊன்றிப் பாய்தல் போட்டியில் எஸ்.றஞ்சித்குமார் 3.30 மீற்றர் பாய்ந்து முன்னைய சாதனையைச் சமப்படுத்தியுள்ளார்.

உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. ஆனாலும், அணி வீரர் என்.நிரோஜன் ஐந்து போட்டிகளில் விளையாடி மொத்தம் பத்துக் கோல்களைப் பெற்றுள்ளார்.

ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் 77 கிலோ எடை தூக்குதலில் எம.பகீதரன் 3 ஆம் இடத்தையும் 85 கிலோ எடை தூக்கலில் எஸ்.கிரிதரன் 2 ஆம் இடத்தையும் பெற்று முறையே வெண்கலம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

தடகளப் போட்டியில் 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் எஸ்.றஞ்சித்குமாரும் 100 மீற்றர் ஓட்டத்தில் எ.துஷ்யந்தனும் தட்டெறிதல் போட்டியில் ரி.கலைமகளும் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் ரி.வாசுகியும், ஈட்டியெறிதல் போட்டியில் ஏ.நித்தியாவும் மற்றும் 4X400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் எஸ்.றஞ்சித்குமார்,பி.கிருபானந்தன் எ.யூட் பிரசாந்தன், எஸ்.ஜெயானந்தன் அணியினரும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் பி.கிருபானந்தன், 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் என்.சுகந்தன், தத்தி மிதித்துப் பாய்தல் போட்டியில் ரி.வாசுகி, ஈட்டியெறிதல் போட்டியில் பி.வேனினி மெற்றில்டா, உயரம் பாய்தல் போட்டியில் எ.சந்திரிக்கா மற்றும் 4X400 மீற்றர் ஓட்டப்போட்டியில் எஸ்.றஞ்சித்குமார், பி.கிருபானந்தன், எ.துஷ்யந்தன், பி.குகராஜ் அணியினரும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

குழுநிலைப் போட்டியான கிரிக்கெட் போட்டியில் முதலாம் இடத்தையும் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் 3 ஆம் இடத்தையும் ஹொக்கி, சதுரங்கம் ஆகிய போட்டிகளில் நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

(10-86-185)

## உள்ளக விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்புவிழா சனியன்று

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்.வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்ட உள்ளக விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவின்போது மேசைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பங்குகொள்ளும் ஒற்றையாட்டம், பெண்கள் பங்குகொள்ளும் ஒற்றையாட்டம், ஆண்கள் பங்குகொள்ளும் இரட்டையாட்டம், கலப்பு இரட்டையர் ஆட்டம் ஆகியவற்றின் இறுதிப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (10-190)

## 10 கோடி ரூபாவில் விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரி

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் கிளிநொச்சி, முறிகண்டிப் பகுதியில் 35 ஏக்கர் நிலப்பரப்பில் 10 கோடி ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கட்டவேலைகள் இடம்பெற்று வருகின்றன.

(10-190)

## வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் உள்ளக விளையாட்டுப் போட்டியின் சதுரங்க விளையாட்டுப் போட்டி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டிகள் வயதுக் கட்டுப்பாடு மற்றும் திறந்த போட்டிகளாக இடம்பெற்றன. இப்போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு-

**10 வயது ஆண்கள்**

இறுதிப்போட்டியில் எஸ்.சஞ்சயனும் ஆர்.எஸ்.அபிசேக்கும் விளையாடியதில் எஸ்.சஞ்சயன் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

**10 வயதுப் பெண்கள்**

இறுதிப் போட்டியில் செல்வி கே.டிலுசியும் செல்வி ரி.பிரதீபாவும் விளையாடியதில் செல்வி கே.டிலுசி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

**14 வயது ஆண்கள்**

இறுதிப்போட்டியில் எஸ்.விஸ்ணுச்சந்திரனும் ஐ.சங்கரதினேசும் விளையாடியதில் எஸ்.விஸ்ணுச்சந்திரன் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

**16 வயது ஆண்கள்**

இறுதிப்போட்டியில் எஸ்.விஸ்ணுச்சந்திரனும் ரி.கமலச்சந்திரனும் விளையாடியதில் எஸ்.விஸ்ணுச்சந்திரன் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

**18 வயது ஆண்கள்**

இறுதிப் போட்டியில் எஸ்.கே.அச்சுதபாயனும் பி.கெனத்ஜீத்திறோவும் விளையாடியதில் எஸ்.கே.அச்சுதபாயன் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

**45 வயதுக்குமேல் ஆண்கள்**

இறுதிப்போட்டியில் ரி.இராஜசிங்கமும் ஏ.கே.சந்திரநாயகமும் விளையாடியதில் ரி.இராஜசிங்கம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

**திறந்த போட்டி ஆண்கள்**

இறுதிப் போட்டியில் எஸ்.வித்தியாதரனும் எஸ்.சோதிநாதனும் விளையாடியதில் எஸ்.வித்தியாதரன் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

**திறந்த போட்டி பெண்கள்**

இறுதிப்போட்டியில் எஸ்.ராதிகாவும் கே.யாழினியும் விளையாடியதில் எஸ்.ராதிகா சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (10-86-190)

## பங்களாதேஷ் செல்லும் இந்திய அணி விரைவில் அறிவிக்கப்படும்

மும்பை,டிசெ.1

தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்போது கொல்கத்தாவில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டி நாளை நிறைவடையவுள்ளது.

இதனையடுத்து, இந்திய அணி பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இரு அணிகளிடையேயான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதற்கான இந்திய அணி 7ஆம் திகதி அங்கு புறப்பட்டுச் செல்கிறது. இதில் பங்கேற்கும் அணி கொல்கத்தாவில் நடைபெற்று வரும் 2 ஆவது டெஸ்டின்போது அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

போட்டி விவரம் வருமாறு:-

டிசெம்பர் 9 - 13 ஆம் திகதி வரை (முதல் டெஸ்ட்), 16 -20 ஆம் திகதி வரை (2 ஆவது டெஸ்ட்), 23 ஆம் திகதி (முதல் ஒருநாள் போட்டி), 26 ஆம் திகதி (2 ஆவது ஒருநாள் போட்டி), 27 ஆம் திகதி (3 ஆவது ஒருநாள் போட்டி). (10)

# உதயன் பதிவில் போதிந்தவை

**கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் தமிழர்களின் சுதந்திரத்தில் – வாழ்வியலில் ஒரு பகுதி.**

**உதயனின் உதயகால தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.**

## 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்...

10.12.1985

இலங்கைத் தமிழர் பிரச்சினை:

### இராணுவத் தீர்வை இந்தியா சகிக்காது

பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் தீர்வே இறுதியானதாக இருக்கும்

லோக சபையில் அமைச்சர் பகத்

10.12.1985

### அரசியல் கொலைகள் குறித்து பாரதம் குரல் எழுப்ப வேண்டும்

சென்னையில் தமிழர் விடுதலை கூட்டணி அறிக்கை

10.12.1985

### நாவற்குழி பதறியது

ஒரு மணி நேர துப்பாக்கிச் சமர்

மக்கள் இடம்பெயர்வு;போக்குவரத்துஸ்தம்பிதம்

11.12.1985

சுவிஸிலிருந்து

### இலங்கைத் தமிழரை வெளியேற்றுதீர்!

மன்னிப்புச் சபை கேட்கிறது

10.12.1985

### யாழ். குடாநாட்டில் உருளைக்கிழங்கு செய்கை படுதோல்வி

11.12.1985

### அரசுக்கு ராஜீவின் யோசனை

நீண்ட கால முயற்சிக்குப் பலன்

### மகாதேவா தாம்போதி

அடுத்த திங்கள் பாவனைக்கு

பாலம் அமைக்கும் வேலை மிச்சம்

— அலுவலகச் செய்தியாளர் —

12.12.1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் ஆரோக்கியமான இனமாக வாழவேண்டும் என்பதே தலைவரின் வேணவா!

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா உரை



நல்லூர்.டிசெ.1

சுதந்திரத்திற்கான ஆரோக்கியம்மிக்க இனமாக எமது மக்கள் வாழ வேண்டும் என்பது எங்கள் தேசியத்தலைவரின் வேணவா.

- இவ்வாறு தேசியத் தலைவர் பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தையொட்டி தமிழீழ விளையாட்டுத் துறையின் தயாரிப்புக்களான கராத்தே இறுவட்டு சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எஸ்.அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

தேசிய மட்டத்தில் அல்லாது சர்வதேச அரங்கிலும் எமது பிள்ளைகள் விளையாட்டுக்களில் தமது உச்சத்திறனை எடுத்துக்காட்டக் கூடியதான வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்பதில் அவர் அக்கறை கொண்டுள்ளார்.

தமிழர்களுக்குப் பலம் இருக்கக்கூடாது என்பது எதிரியின் எண்ணம். மக்களே அவர்களது மனங்களை எவ்வகையிலும் கவர வேண்டும் என்பதில் ராணுவமும் பல்வேறு வழிகளைக் கையாண்டபோதும் எமது மக்கள் அவர்களை ஒழிக்கவேண்டும் என்பதில் தலைவருக்கும் போராளிகளுக்கும் உறுதுணையாகவே இருந்துவருகின்றனர்.

எமது விளையாட்டு வீரர்களுக்குத் தென்னிலங்கை உரியகௌரவம் அளிப்பதில்லை. இந்தநிலையில், தமிழர்களின் தனித்துவம் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக விளையாட்டுத்துறை குறித்த அவரது சிந்தனைகள் அடங்கிய சஞ்சிகையை அவரது 50ஆவது அகவையின் போது வெளியிட்டு வைப்பதில் தமிழீழம் பெருமைப்படுகின்றது. உதைபந்தாட்டப் பயிற்சி குறித்த தமிழ்மொழியிலான சஞ்சிகையும் சென்சி லீ.சிமித்தின் தமிழீழ வருகை என்னும் கராத்தே இறுவட்டும் எமது மக்களுக்காக எமது விளையாட்டுத்துறை வழங்கியுள்ளது.

இவற்றினால் இளம் சமுதாயம் மிகவும் பயனடையும் என்பது எமது நம்பிக்கை என்றார்.

### நியாயமான நிலைப்பாடு

அருட்திரு.ஜெயசீலன் அடிகளார் தமது வாழ்த்துரையில் கூறியதாவது:- அனைத்துச் சமயங்களிலும் அடிப்படைக்கொள்கை உண்டு. சமயப்பின்னணிகளை நோக்கும்போது எமக்குக் கிடைத்த அருங்கொடைதான் தலைவர் பிரபாகரன்.

மக்கள் அநீதிகள், அழிவுகள் எனத் துன்பியலுக்குஉட்படும்போது 'அவர்களைக்காக்க அவதாரங்கள் தோன்றுவது இறைவனின் மக்களுக்கான அருளாகும். கி.மு.1400 ஆண்டுகளில் இதுபோன்ற ஒரு தலைவன் அவதரித்துத் தன்னை அர்ப்பணித்தான்.

எமது தலைவர் பிரபாகரனும் அப்படி எமக்குக் கிடைத்த ஒரு அவதாரம். எமது தேடல்கள், அபிலாஷைகள் நிச்சயமாக நிறைவு பெறும். அவர் எடுத்த நிலைப்பாடு நியாயபூர்வமானது. அவரது பிறந்ததினத்தில் விளையாட்டுத்துறையின் முக்கியத்துவம் உணரப்பட்டு எமது சமுதாயத்தின் உடல் உறுதிக்காகவும், ஆரோக்கிய வாழ்வுக்காகவும் இன்றைய வெளியீடுகள் ஒரு தேவையாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றை வெளியிட்ட விளையாட்டுத்துறையினர் ஒரு நல்ல எதிர்காலம் உருவாகப் பணியாற்றியுள்ளனர் - என்றார்.

இறுவட்டின் முதல்பிரதியை யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியிடம் இருந்து மாவீரர் பெற்றோரின் சார்பில் எஸ்.கணபதிப்பிள்ளை பெற்றுக்கொண்டார்.

முன்னதாக பொதுச்சுடரை எஸ்.கணபதிப்பிள்ளையும், தேசியக் கொடியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் ஏற்றிவைத்தனர். (8-111)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர்
### கந்தையா கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம்,
காவேரி சில்க், லிற்றில் இந்தியன் பெஷன் ஆரம்பகால ஊழியரும்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31.01.1949 | 18.10.2004 |

**அன்புடனும் பண்புடனும் ஆதரவு காட்டியே**
**அகிலமதில் மாண்புடனே புகழோடு வாழ்ந்தீர்**
**இன்முகங் காட்டியே வந்தாரை வரவேற்று**
**புன்முறுவல் பூத்த வண்ணம் உபசரிப்பீரே!**
**என்றும் உமது நினைவு எம் நெஞ்சில் நீங்காது!**
**பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு மறையாது!**
**இன்று உமது ஆத்மா சாந்தி பெற வேண்டுமென**
**ஆண்டவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (01.12.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு, தொடர்ந்து நிகழ்கின்ற மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு உடனே வந்து ஆறுதல்கூறி அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தபால், தந்தி, தொலைபேசி மூலம்அனுதாபந் தெரிவித்து கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து துக்கம் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்து துக்கத்தைப் பகிர்ந்து அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பிரிவால் வருந்தி நிற்கும்:*
**அன்பு மனைவி, மக்கள், மருமகன்,**
**உற்றார், உறவினர்கள்.**

49/5, வில்வந்தெரு,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(39132)(42-34-16-17)




# TRRO LTD மற்றும் அனைத்து நிறுவனங்களும் இணைந்து அமுலாக்கும்



# சர்வதேச எயிட்ஸ் தினமும் கொழிவாரமும்

டிசெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதிவரை எமது எதிர்கால சந்ததி பேண விழிப்புடன் செயற்படுவோம்.
யாழ். மாவட்ட அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் தொண்டர்கள் உங்களிடம் வருகிறார்கள்.

**ஊடக அனுசரணை:**

எயிட்ஸைப் பற்றி அறிந்துகொள்வோம்
எதிர்காலத்தை நமதாக்குவோம்.

உங்கள் விடுமுறையை களிக்க
யாழ் மண்ணில் ஒரு
சிறந்த இடம்

Air conditioned Rooms
A/C non A/c Restaurants
24 hours Room Service
Western Toilets
Indian/Chinese Restaurant
Friendly Staffs

கொசீ
தங்ககம் & உணவகம்
15, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 7100, 021 222 5899




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாவின் பிறந்த தினத்தன்று மூதாளர் பேணலகத்துக்கு அடிக்கல்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நாட்டினார்

கிளிநொச்சி,டிசெ.1

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு மூதாளர் பேணலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் -தலைவரினால் மூதாளர்களின் பாவனைக்கென வழங்கப்பட்ட ஊர்தி கையளிப்பு நிகழ்வும் - கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

மூதாளர் பேணலகத் தலைவர் அ.கனகரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினைத் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றியதுடன், கட்டடத்திற்கான அடிக்கல்லையும் நாட்டிவைத்தார். தொடர்ந்து பொன்.தியாகமும் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இதேவேளை-

மூதாளர் பேணலகத்திற்குக் கிணறு அமைப்பதற்கான இடத்தில் மண் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இதனைக் கட்டடப் பொறியியலாளர் சுதர்சன் ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனால் வழங்கப்பட்ட சிற்றூர்தியினை நிதித்துறையைச் சேர்ந்த தமிழ்க்குமரன், மூதாளர் பேணலக இயக்குநர் விக்கியிடம் கையளித்தார்.

மூதாளர் பேணலகத்தில் உள்ளவர்களுக்கு காலை உணவு, சிற்றுண்டி என்பனவும் அன்றையதினம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் போராளிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (8-12)

# நாச்சிக்குடா கிராமத்தில் சிறுவர் பூங்கா

பூநகரி,டிசெ.1

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நாச்சிக்குடா கிராமத்தில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது. இப்பூங்காவிற்கான அடிக்கல்லும் அண்மையில் நாட்டப்பட்டுள்ளது. இப்பூங்கா அமைப்பதற்கென யு.என்.டி.பி. நிறுவனம் 8 லட்சத்து 74 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது.

இப்பூங்கா அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும் என நாச்சிக்குடா கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.மரியநாயகம் தெரிவித்தார். (8-403)

# ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலைய புதிய கட்டடம் திறந்து வைப்பு

புதுக்குடியிருப்பு,டிசெ.1

இராணுவ நடவடிக்கையால் தரைமட்டமாக்கப்பட்ட ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையம் நிகொட் நிறுவன நிதியுதவித் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த மாதம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கமநல உதவி ஆணையாளர் க.தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் வைதேகியின் சகோதரி தேவகுலரூபி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் வலயப் பொறுப்பாளர் பாவரசி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கட்டடத்தின் பெயர்ப்பலகையை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் திரைநீக்கம் செய்துவைக்க கட்டடத்தினை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து கமநலசேவை நிலையத்தினை உதவி ஆணையாளர் க.தர்மலிங்கமும் வங்கிக் கிளைக் கட்டடத்தினை புதிய உதவி ஆணையாளர் நா.சிவலிங்கமும் கமநலசேவைகளுக்கான அறையினைப் பொறியியலாளர் நிறைஞ்சனும் மிருக வைத்திய நிலையத்தினை மிருக வைத்தியர் கஜரஞ்சனும் கமக்கார அமைப்பின் சம்மேளன மண்டபத்தினை முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கோகுலதாஸனும் நாடாவெட்டித் திறந்துவைத்தனர்.

தொடர்ந்து பல கருத்துரைகளும் இடம்பெற்றன. (8-203-341)



போர்ப்பறை வெளியீட்டகத்தின் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்த நிகழ்வல் 'தப்பியவன்' 'ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள்' ஆகிய இரண்டு தமிழாக்கம் செய்யப்பட்ட. நூல்கள் வெளியிடப்பட்டன. 'தப்பியவன்' என்ற நூல் போராளி சந்திரமதியாலும் 'ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள்' என்ற நூல் போராளி மார்சலாலும் தமிழாக்கம் செய்யப்பட்டவை ஆகும். போராளி சந்திரமதி 'தப்பியவன்' நூலை வெளியீட்டு வைக்க, படைத்துறையைச் சேர்ந்த தினேஸ் மாஸ்ரர் அதனைப் பெற்றுக் கொள்வதையும் போராளி கதிரவள் 'ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள்' நூலை வெளியீட்டு வைக்க கேணல் விதுஷா அதனைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (8)

# பொருண்மிய மதியுரையகத்தினால் சூரிய மின்கலத் தொகுதி அன்பளிப்பு

கிளிநொச்சி,டிசெ.1

தேசியத் தலைவரின் பிறந்ததினத்தன்று எம் கல்வியை மேம்படுத்துமுகமாக ஒட்டுசுட்டான் பொருண்மிய மதியுரையகத்தில் வைத்து மின்சார வசதியற்ற மாணவர்கள் கல்வியை பெறும் பொருட்டு ஒன்பது மின்கலத் தொகுதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன், பணிப்பாளர் சுந்தரமூர்த்தி, ஜேர்மன் ரெக்கைச் சேர்ந்த வி.வலன்ரைன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், ஜப்பானைச் சேர்ந்த பத்திரிகையாளர் எரிக், கனடா ரெக்கைச் சேர்ந்த விஸ்வா, லண்டன் ரீ.ஆர்.ரெக்கைச் சேர்ந்த ரகு, திருமதி செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை ஜேர்மன் ரெக்கைச் சேர்ந்த வலன்ரைன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் ஏற்றிவைத்தார். அதனை தொடர்ந்து மாவீரர் பொதுப்படத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மாலை அணிவித்தார். மாலதியின் படத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் மாலை அணிவித்தார். தொடர்ந்து மங்கள விளக்கினை துணுக்காய் வலய கல்விக்கழகப் பொறுப்பாளர், பாலிநகர் மகா வித்தியாலய அதிபர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பொருண்மிய மதியுரையக நடுவப்பணியகத்தில் வைத்து திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள திலீபன் மருத்துவமனைகளில் மின்சார வசதியின்மையால் இரவு வேளைகளில் வரும் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் உள்ள சிரமங்களைத் தவிர்க்கும் முகமாக மூன்று சூரிய மின்கலன்கள் வழங்கப்பட்டன. இச்சூரியமின்கலன்களை திலீபன் மருத்துவமனைகளின் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழ்மாறன் பெற்றுக்கொண்டார். (8)




# பாலை சந்தைப்படுத்த முடியாமல் அவதியுறும் கால்நடை வளர்ப்போர்

பூநகரி,டிசெ.1

பூநகரிப் பிரதேச மக்கள் பால் சந்தைப் படுத்தல் வசதியின்றி அவதிப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் பெருமளவான கால்நடைகளை வளர்ப்போர் பால் சந்தைப்படுத்தல் வசதியின்றிக் காணப்படுவதால் பால் கறப்பதையும் இடைநிறுத்தியுள்ளனர்.

இப்பிரதேச மக்கள் பல ஆண்டுகளாக இப்பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

இதுகுறித்து பல அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தியும் அதற்கேற்ற வசதிவாய்ப்புகள் இதுவரை ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லையென இப்பிரதேச கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர். (8-403)

# மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

கிளிநொச்சி,டிசெ.1

கிளிநொச்சிப் பேரிகை அமைப்பின் ஒழுங்கமைப்பில் அறிவு அமுது வெளியீடான - உண்மை மனிதனின் கதை, மனக்கோலங்கள், போர் உலா ஆகிய நூல்களின் வெளியிட்டு விழா நாளை 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவர்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பேரிகை அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர். (8-301)

# பொதுமருத்துவ ஆலோசனை

புதுக்குடியிருப்பு,டிசெ.1

ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து வருகை தந்த வைத்திய நிபுணர்கள் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களுக்குப் பொது மருத்துவ ஆலோசனைகளையும் மனநோய் மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

மருத்துவ ஆலோசனைகளை வைத்திய கலாநிதி சூரியகுமாரனும் உளநல நிபுணர் சாந்தி சூரியகுமாரனும் வழங்குகின்றனர். (8-12)

# பாம்புக்கடியினால் சிறுமி மரணம்

திருவையாறு,டிசெ.1

சேமமடு, விநாயகர்புரம் கிராமத்தில் நித்திரையின்போது ஒரேகுடும்பத்தைச்சேர்ந்த இரு சிறுவர்களை பாம்பு தீண்டியது. இதில் ஒருவர் மரணமானார். மற்றவர் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ப.றோசி (வயது 11) என்ற சிறுமியே பாம்பு கடித்து சிலமணிநேரங்களின் பின்னர் மரணமானார். அவரின் சகோதரன் ப.துஷிந்தன் (வயது -10) உடனடியாக நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தொடர்ந்து பெய்த மழையினால் வன்னியில் பாம்புகளின் பெருக்கம் அதிகரித்ததுடன் பாம்புகளின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகிறது. (8-391)

# குழியில் விழுந்த வயோதிபர் பலி!

கால்நடைகளை மேயவிடுவதற்காகக் கொண்டு சென்றவர் புற்களால் மூடிய நிலையில் நீர் நிரம்பியிருந்த குழியினுள் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பெரியதம்பி பரமானந்தம் (வயது - 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

மன்னாகண்டல் 6 ஆம் கட்டையில் வசித்து வந்தவரான இவர், தனது கால்நடைகளை பேராறில் உள்ள தும்புப் பண்ணை அமைந்த காணியில் மேயவிடுவதற்காகக் கொண்டு சென்றார். அங்கே தும்பு உற்பத்திக்காக மட்டைகளை ஊறவைக்கும் பாரிய குழி புற்களால் மூடிய நிலையில் இருந்துள்ளது. அதனை அறியாது அதில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்றும், அவரைக்காணாது அவரது உறவினர்கள் தேடியபோது அக்குழியில் உள்ள நீரில் அவருடைய சுருட்டும் லைற்றர் என்பன மிதந்தன எனவும் அதன் பின்னரே அங்கிருந்து அவரது உடலை மீட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-203-341)

SHARP
be sharp


அதிரடி விலைக் குறைப்பு...
ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் கூடிய
SHARP ரீ.வி., குளிர்சாதனப் பெட்டிகள்
5 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையில் பெற்றுக்கொள்ள.......
இன்னும் பல கொடுப்பனவுகள்.....
BROWNS GROUP BG ESTD 1875
பிறவுண்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புத் திருத்தம்பற்றி ஆராய்வதை விடுத்து தேசிய பிரச்சினைத் தீர்வில் கவனம் செலுத்துக!

## அரசுக்கு இடித்துரைக்கிறார் பீரிஸ்

கண்டி,டிசெ.1

நாட்டின் தேசியப் பிரச்சினையை அரசு ஒருபுறம் வைத்துவிட்டு அரசியல் சாசனத்திருத்தம் பற்றியும், வேறு விடயங்கள் குறித்துமே ஆராய்ந்து வருகின்றது.

இதனால், நாட்டின் நிலைமை குழப்பநிலைக்குத் தள்ளிவிடப் பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல்.பீரிஸ் ஊடகவியலாளரிடம் தெரிவித்தார்.

அவர் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று அங்கு அஸ்கிரிய பௌத்த பீடாதிபதியையும் சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எவரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இதனையடுத்து அவர் செய்தியாளர்களை வெளியில் சந்தித்தார்.

அங்கு அவரிடம் கேள்விகள் பல தொடுக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலளித்த பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுடன் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக இணைந்து செயற்படுமாறு மகாநாயக்கர் என்னைக் கேட்டுக்கொண்ட போதிலும், அரசின் முன்னுக்குப்பின் முரணான செயற்பாடுகள் இவ்வாறு செயற்படுவதில் இருந்தும் என்னைத் தள்ளிவைக்கின்றன.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், தேசியப் பிரச்சினை குறித்து அரசுடன் இணைந்து செயற்பட ஆர்வத்தைத் தெரிவித்த போதிலும் எமது கட்சியைச் சேர்ந்த நபர்களை தம்பக்கம் இழுக்கின்ற அரசுடன் எப்படி நாம் இணக்கம் காண்பது?

அரசியல் சாசனத்தை மாற்றவும் வேறு நடவடிக்கைகளுக்கே அரசு முன்னின்று செயல்படுகின்றது.

இன்றையநிலையில் எத்தகைய பிரச்சினைக்கு முன்னுரிமைகொடுக்கவேண்டுமென்பதை அரசு புறக்கணித்து வருகிறது. இதனால், நாடு இன்று பெரும் குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாமும் ஒத்துழைக்க முற்படும்பொழுது எம்மை ஓரங்கட்ட முயற்சிப்பதால் எப்படி ஒத்துழைக்க முடியும்? - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

இவருடன் மலிக் சமரவிக்கிரமவும் வந்திருந்தார்.

பேராசிரியர் பீரிஸ், மல்வத்தை பீடாதிபதியையும் சந்தித்துப் பேசினார். (ஐ-க)

## இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

எமது மாணவி செல்வி

**சிவாஜினி அமிர்தலிங்கம்**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் மன்றம்,

(சி-39409) (43-11-16) யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

**சந்திரா அற்புதலிங்கம்**

(எழுத்தாளர்)

(நெடியகாடு வல்வெட்டித்துறை)

தமிழிலும் ஆங்கில மொழியிலும்
நூல்கள் தினம் வாசித்தாய்
எங்கள் தாயக விடுதலைக்காய்
நீயும் யோசித்தாய்
கதைகள் சிலவே தந்தாய்
நின்று அவற்றால் எம்மை வென்றாய்.

29.11.2004 அன்று நடைபெற்ற விபத்தொன்றின்போது எம்மைவிட்டுப் பிரிந்த எழுத்தாளர் **திருமதி சந்திரா அற்புதலிங்கம்** அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**கப்டன் வானதி வெளியீட்டகம்**

இல.61, கனகபுரம்,
கிளிநொச்சி. (39148) (24-11-16-43)

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு பாலசுந்தரம்

கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுந்தரம் நேற்று (30.11.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு - மாணிக்கம் தம்பதிகளின் மகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சுஜிலா (லண்டன்), சுஜீபன், லஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாகரனின் (லண்டன்) மாமனாரும் அபிராவின் பேரனும் சிவானந்தம், மகேஸ்வரி (லண்டன்), சிவநாதன், நிர்மலாதேவி (இந்தியா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளையாட்டரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (39141)(43-11-16)

தகவல்:
திருமதி பா.சறோஜினிதேவி
(மனைவி), பிள்ளைகள்

### திருமதி வள்ளிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை நேற்று (30.11.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதவனம் சிதம்பரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் கணேசநாயகி (வவுனியா), சிவப்பிரகாசம் (இளைப்பாறிய அதிபர், தரணிக்குளம், வவுனியா), கலாநிதி சிவலிங்கராசா (தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), தவமணிதேவி (வட்டக்கச்சி), வசந்தாதேவி (அரசினர் வைத்தியசாலை, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம் (வவுனியா), நாகம்மா (தரணிக்குளம்), சரஸ்வதி (உடுவில் மகளிர் கல்லூரி), குமாரசாமி (வட்டக்கச்சி), மார்க்கண்டு (பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.* (39144)(43-15-45)

தகவல்:
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா
(மகன்).

## ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த எழுவர் உட்பட 9 பேரை விசர் நாய் கடித்தது

தென்மராட்சி,டிசெ.1

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் உட்பட ஒன்பது பேரை விசர்நாய் கடித்துக் காயப்படுத்திய சம்பவம் ஒன்று நேற்றுமுன் தினம் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

விசர் நாயினால் கடியுண்ட ஒன்பது பேரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதே இடத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் சர்மிளா (வயது 9), தனபாலசிங்கம் லக்சுதா (வயது 9), தனபாலசிங்கம் ரஜிந்தன் (வயது 6), தனபாலசிங்கம் தர்சா (வயது 19), தனபாலசிங்கம் மல்லிகாதேவி (வயது 33), தனபாலசிங்கம் கார்த்திகா (வயது12), தனபாலசிங்கம் ரஜி (வயது 3½), சரசாலை வடக்கைச் சேர்ந்த பாலசிங்கம் சோபியன் (வயது47), சங்கத்தானையைச் சேர்ந்த மணிவண்ணன் தீபன் (வயது17) ஆகியோரே விசர் நாயினால் கடியுண்டவர்களாவர். (10-117)

## பாடசாலைகளில் சிசு உதான சேமிப்பு

தென்மராட்சி, டிசெ.1

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையினர் மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு பாடசாலைகளில் 'சிசு உதான' சேமிப்புப் பிரிவினை ஆரம்பித்து வருகின்றனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி வரணி மகா வித்தியாலயத்தில் சேமிப்புப் பிரிவினை ஆரம்பிக்கவுள்ளனர்.

கடந்த வாரம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் 'சிசு உதான' சேமிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (10-117)


## நெல்லை சில்க் அதிர்ஷ்டம்

இந்த மாதத்திற்கான பட்டுச்சேலை அதிர்ஷ்டலாபச்சீட்டு இல.2363 நேரடியாக வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

S.அகிலதாஸ்
உரிமையாளர்.

(சி-39414)


## தவறிவிட்டது

வடமராட்சி புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மனல் விநியோக அனுமதிப் பத்திரம் (29.11.2004) திங்கட்கிழமை வடமராட்சிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதனை 24ஸ்ரீ 1127 இலக்க லொறியின் சாரதியான நடராசா கனகதாஸ் அவர்களுக்கு அனுப்பி உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம். சன்மானம் வழங்கப்படும்.

[illegible]
திரு.ந.கனகதாஸ்
முருகன் கோயிலடி
(39141)பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லத்துரை கதிராசிப்பிள்ளை



தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மலேசியா, லண்டன, தோப்பு - அச்சுவேலி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை கதிராசிப்பிள்ளை 27.11.2004 சனிக்கிழமை இரவு 11.00 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் தவமணி, சிவஞானம், வள்ளிநாயகி, சுந்தரமூர்த்தி, அருள் ஆகியோரின் அன்புத தாயாரும் தவமணி, விசாகா, நல்லையா, சறோயினி, சிறிதரன், கமலேஸ்வரி, எடித் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தோப்பு, அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (02.12.2004) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தோப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தோப்பு,*
*அச்சுவேலி.* (39141)(43-11-16)

தகவல்:
க.நல்லையா (மருமகன்)

### நாகலிங்கம் தர்மேந்திரர்

**(முன்னாள் திடீர் மரணவிசாரணை அதிகாரி, சமாதான நீதிவான் - சாவகச்சேரி)**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் தற்பொழுது வத்தளையில் வசித்தவருமாகிய நாகலிங்கம் தர்மேந்திரா 29.11.2004 திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நல்லம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான P.D.சின்னையா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஞானகாந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிமால் மற்றும் நிமலா, நிமாலினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2004) புதன்கிழமை பிற்பகல் 584/2, Negombo Road, Mabole Wattala இலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*175, கண்டி வீதி,*
*சாவகச்சேரி.* (சி-39404)(43-11-16)

தகவல்:
ராதா நீலகண்டன்
சத்தியபாமா இராமநாதன்
(சகோதரர்கள்)

### ஆறுமுகம் சூரியகுமாரன்

**(சிரேஷ்ட சாலைப் பரிசோதகர், ஆளணிப்பிரிவு, வ.பி.போ.ச. கோண்டாவில்)**



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சூரியகுமாரன் அவர்கள் 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் வ.பி.போ.ச.தேசிய ஊழியர் சங்க உபதலைவரும், கைதடி ஸ்ரீஞானவைரவர் கோவில் பரம்பரைத் தலைவரும், தொலைத்தொடர்பு (மோட்டோறோலா) உரிமையாளர் சங்கச் செயலாளரும், கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை, கைதடி கிராம அபிவிருத்திச் சபை, கைதடி ஐக்கிய நாணய சங்கம், தமிழரசுக் கட்சி, கைதடி பொது நூலக அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் உறுப்பினரும் ஆவார்.

அத்துடன் அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - திருப்பதிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும் முத்துக்குமாரசாமி - திருவருட்சக்தி தம்பதிகளின் ஆசை மருமகனும் தயாபரியின் (ஆசிரியை, யா/கைதடி முத்துக்குமார சுவாமி ம.வித்தி.) அன்புக்கணவரும் கோகுலறமணன் (மாணவன் - IDM, NAITA), மயூரன் (தரம் 11 மாணவன், யா/பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாதேவி, சந்திரகுமார் (முன்னாள் உத்தியோகத்தர் - கமநலசேவைகள் திணைக்களம், கைதடி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைத்திய கலாநிதி பொ.சண்முகரத்தினம், நாகேஸ்வரி, ஸ்ரீகாந்தன் (D.O.A., யாழ். சாலை), கிருபாலினி, தேவகி, குமுதினி - கௌரி (ஆசிரியைகள், யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி.), விஜியலட்சுமி, சோமலிங்ககுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் யமுனாமலர், கந்தப்பசேகரம் (ஸ்ரீவிக்னேஸ்வரா களஞ்சியம் - சாவகச்சேரி), அமரர் சிவசம்பு ஆகியோரின் சகலனும் நளினி - கருணானந்தன் (கணனிப் பொறியியலாளர் - நோர்வே), ஜெயமாலினி - சத்தியேந்திரன் (நியூ பாமா ஹாட்வெயர்ஸ், யாழ்ப்பாணம்), ஜெயந்தினி (கணனிப் பொறியியலாளர் - நோர்வே), Dr.பரமானந்தம் (ரஷ்யா), ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் பவளகாந்தன் (பொறியியலாளர் - லண்டன்), பவளராணி, பவளநாதன் (பரிசோதகர் - தேசிய தொழில் பயிலுநர்சபை), பவளகுமாரன் (உபஅதிபர் - யா/கைதடி முத்துக்குமார சுவாமி ம.வித்தி.), கமலேஸ்வரி (ஆசிரியை, மன்னார்), செல்வகுமரன் (மலேஷியா), அமரர்களான சிவகுமாரன், புவனேஸ் வரி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஜனகரூபன் (SLIIT, முதலாம் வருட மாணவன்), ஐங்கரன், பரதகுமாரன், கங்காசுதன், நித்தியானந்தன் (பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் - மன்னார்), ரதிதேவி, ஸ்ரீகாந்தன் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் - உரும்பிராய்), கலாதேவி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சியாமளாதேவி (ஆசிரியை, கொ/அரபாத் முஸ்லிம் வித்தியாலயம்), சிவஞானம் (ஞானம்ஸ் பிறிண்டேர்ஸ் - கைதடி), சிவச்செல்வி, சிவரூபன், சிவகஜன், சிவலக்ஷ்மன், செந்தூரன் (H.S.B.C- கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் அட்ச்சயன், அபிசரன், அபிராமி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2004) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*பொதுநூலக வீதி,*
*கைதடி தெற்கு,*
*கைதடி.* (சி-39405)(43-15-45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்

பெரிய நாவலடி — கொடிகாமம்

## மணவாழக் கோல உற்சவம்

**அம்பாளின் மணவாழக்கோல உற்சவம் 02.12.2004 ஆம் திகதி வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற அம்பாளின் அருள் கூடியுள்ளது.**

**அன்றைய தினம் காலை 7மணி முதல் சங்காபிஷேகத்துக்கான கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பூசை நடைபெற்று அம்பாள் வீதி உலாவும் நடைபெறும்.**

**அதன்பின் மாகேஸ்வரபூசையும் நடை பெறும்.பக்தர்கள் யாவரும் கலந்து சிறப்பித்துப் பயன்பெற்றுய்வீர்களாக!**

**— ஆலய தர்மகர்த்தா.**

(39154) (11-18-32)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியைகள் ர.இரஜனியின் தந்தையும் அ.பரமேஸ்வரியின் மைத்துனருமான

**சிவகுரு கந்தவனம்**

அவர்கள் 29.11.2004 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-39417) (11-18-32)

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

# வீர வணக்கம்




**தாயக மண்ணில் : 16.07.1976**
**தாயக வேள்வியில்: 28.11.2004**

**ஜெயசேனா காமினி**

ஊர்காவற்றுறை

கடந்த 01.08.1997அன்று வவுனியா நம்பைக்குளம் பகுதியில் நிலைகொண்டு இருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலின்போது விழுப்புண்அடைந்து சிகிச்சைபெற்று 28.11.2004 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் கடல் வேந்தன் அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(39151) (11-18-32)

தேசிய எழுச்சிப்பேரவை
ஊர்காவற்றுறைப் பிரதேசம்

# வீர வணக்கம்




ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட *ஜெயசேனா காமினி* ஆகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் **கப்டன் கடல் வேந்தன்** 1997இல் விடுதலைப் போரில் காயமுற்று. 28.11.2004இல் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இம் மாவீரனுக்கு ஊர்காவற்றுறை வர்த்தக சங்க உறுப்பினர்கள் வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

(சி-39150) (11-18-32)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் கலாநிதி சிவலிங்கராஜா அவர் களின் பாசமிகு தாயார்

**திருமதி சிதம்பரப்பிள்ளை வள்ளிப்பிள்ளை**

அவர்கள் காலமானதையிட்டு மிகுந்த துயர் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி சிவஞானசுந்தரம்
குடும்பத்தினர்.

கண்ணன் இல்லம்,
17/9, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு. (சி-39416) (11-18-32)

# மரண அறிவித்தல்

## சானை சின்னத்துரை



கொல்லங்கலட்டி, இன்னாவத்தையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, முள்ளானையை வசிப்பிடமாகவும் கொண்ட சானை சின்னத்துரை 30.11.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சானை - பூரணம் தம்பதிகளின் மகனும் தங்கராசா (முன்னாள் சிமெந்துகூட்டுத்தாபன பாரவாகன சாரதி, தற்போது அம்பிகை களஞ்சிய சாரதி), தவமணி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேஸ்வரி, இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் சந்திரகலா, தயகலா, கருணராஜா, சிவகலா, (கல்வியியற் கல்லூரி கோப்பாய்), ரதிகலா, சுஜித் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் டிரோசன், மதுராசினியின் அன்புப் பேரனும் அருட்சோதி, லோகராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, இன்று (01.12.2004) புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கிராயிட்டி மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முள்ளானை,*
*அளவெட்டி.* (39159) (11-18-32)

தகவல்:
சா.தங்கராசா

## 36 மணித்தியாலங்களுக்குள் புயலுடன் கூடிய மழை

வடக்கு-கிழக்கில் எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்குள் புயற்காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த மழையானது கூடுதலாக யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, பொலன்நறுவை அகிய மாவட்டகளிலேயே பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

**D.C.A**

வெளிவாரிப் பட்டப்படிப்புகள், ஸ்ரான்லி றோட், மக்கள் வங்கி அருகில யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு
2003-2004
G.A.Q.,
1st in Com.
புதிய பிரிவுகள்

கணக்கீடு- D.SAM
வர்த்தகம்-பசீல்
பொருளியல்- இராஜேஸ்வரன்
கணிதம்-தவசேகர்
தமிழ்-மீரா
இ.நா.-ஜோதீஸ்வரன்
மெய்யியல்-மோகன்
புவியியல்-கிரிதரன்
அரசறிவியல்- பொன்சந்துரு
நாடகம்- சந்திரன்
ஆங்கிலம்-சுதர்ஷன்

ஆரம்பம்: 4.12.2004
சனி 9.00 a.m.
தனிப்பாட அனுமதியுண்டு.

## வைத்தியசாலை சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பு

பதுளை, இரத்தினபுரி அரச வைத்திய சாலைகளில் கனிஷ்ட ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

இந்தப்போராட்டத்தை இன்று கேகாலை அதனையடுத்து குருநாகல எனத் தாம் விரிவுபடுத்தப் போகின்றார்கள் எனவும்தெரிவித்தனர் கனிஷ்டநிலை ஊழியர்கள்.

மூன்று மாதகாலமாக வழங்கப்படாமல் இருக்கும் மேலதிகக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை உடனடியாக வழங்குமாறு கோரியே இந்தப் போராட்டத்தை அவர்கள் நடத்துகின்றார்கள்.

ராஜா யாழ்ப்பாணம்

(சி-38750)

இன்னும் சில தினங்கள் மட்டும் அஜித், (இருவேடம்) பூஜா நடித்த

**அட்டகாசம்**

காட்சிகள்: 10.30,2.30, 6.30 மட்டும். (பு.நே) (ரீகல்)



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
3 ஆவது வெற்றிவாரம் தனுஷ், பிரியா நடித்த



**ட்றீம்ஸ்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்:10.30, 2.30, 6.30(பு.நே.)
இரவு 9.00 (பு.நே) தாக்குதல் நிறைந்த படம் **RAMBO-3**

(சி-39052)

நிரஞ்சனாஸ் சங்கானை

சூர்யா (இரு வேடம்) ஜோதிகா நடித்த **பேரழகன்** (ரீல்ஸ்)

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.) **VAN HELSING** (ரகுல படம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

(சி-39051)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த டொல்பி ஒலி அமைப்புடன்

**சத்ரபதி**



தினசரி 11.00 3.00 7.00 (பு.நே)

லக்சுமி சினிமா இணுவில்

மூன்றாவது வெற்றிவாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்

11.00,3.00,
புதிய நேரம்

**மன்மதன்**



(39086)

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் சிவபாதம்

(புத்தொளி மாஸ்ரர்)



அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சிவபாதம் (இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்) அவர்கள் நேற்று (30.11.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - திலகவதி ஆகியோரின் மருமகனும் ருக்குமணிதேவியின் அன்புக் கணவரும் சிவலோகநாதன் (பிரான்ஸ்), சித்திராதேவி, சித்திரலேகா (கனடா), சிவதனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகைபாகன், மோகனச்சந்திரன் (கனடா), யோகேஸ்வரி, (பிரான்ஸ்), பாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கேசவி, கேதுசன், ஆர்த்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (02.12.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 11.00 (பழைய நேரம்) மணிக்கு காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செல்வ அகம்,'*
*ஆனைக்கோட்டை.* (சி-39418) (11-18-32)

தகவல்:
ருக்குமணிதேவி
(மனைவி).

## திருமதி மங்கையர்க்கரசி பரநிருபசிங்கம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி பரநிருபசிங்கம் கடந்த 27ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

அன்னார் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா பரநிருபசிங்கம் அவர்களின அன்பு மனைவியும் கிருஷ்ணலீலா, அமரசிங்கம் (Canada), இந்திரலீலா, பாலச்சந்திரன், பாலேந்திரன் (Canada), சரோஜினி, மகேந்திரன் (Canada), விஜயலஷ்மி, ஜெயலஷ்மி (Canada), ராஜலஷ்மி (Canada), கணேந்திரன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற குணசிங்கம், சந்திரவதனி (Canada), இராஜசூரியர் (U.K.), இந்திரகுமாரி (Canada), இராஜகுமார் (Saudi), மஞ்சுளா (Canada), கேதீஸ்வரன் (Master Feed Ltd.), நடேசன் (Canada), சசிகுமார் (Canada), ஞானாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், கந்தசாமி, நடராஜா, சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவரட்ணம்மா, தனலஷ்மி, காலஞ்சென்ற செல்வமணி ஆகியோரின் மைத்துனியும் சியாமினி, சியாமதி, சியாமீரா, சுதர்சன், சுதாகரன், தர்சினி, மயூரன், கோகுலன், தீபா, நிருபா, பிரவீன், பவித்ரா, கபிலேஷ், காயத்திரி, வெங்கடேஷ், சாயீசன், பிருந்தா, ஆர்த்திகா, ராகுலன், நிவேதா, நிராஜ், அபர்ணா, அனுஜன், அபிஷேக், அகல்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (01.12.2004) புதன்கிழமை அவரின இல்லமான 365/1, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு-03 இல் காலை 9மணி முதல் வைக்கப்பட்டு, பின்பு 02.12.2004 வியாழன் காலை 9மணி முதல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 02.12.2004 வியாழன் பி.ப.3 மணிக்கு நடைபெற்று, பி.ப.5 மணியளவில் பொரளை கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*365/1, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை,*
*கொழும்பு - 03.*
*T.P.: 0114 721380* (சி-39418) (33-11-18-32)

தகவல்:
க.கேதீஸ்வரன்.

## முருகேசு சுப்பிரமணியம்

(குடமியன் - வரணி)



குடமியன், வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பிரமணியம் 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராசபூபதியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரன் (யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), பாஸ்கரன் (பகி), சுகுமார் (சுவிஸ்), சுகந்தினி, சுமதி (U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகரத்தினம் (ஆசிரியர், யா/வரணி மகாவித்தியாலயம்), ஜெகதீஸ்வரன் (U.K.), சாந்தினி (பட்டதாரிகள் பயிற்சி நிலையம் - வடமராட்சி), செல்வம் (கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்), சிலோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டினுாசன், கிருசன், யதுஷா, துஷாயினி (சுவிஸ்), துஷான் (சுவிஸ்), துஷாந், (சுவிஸ்), வினோஜன், பானுஷா, அபிரா (U.K.), சுஜானி, நிஷானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2004) புதன்கிழமை கரவெட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக பிற்பகல் 2மணிக்கு சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சி.சிவக்கொழுந்து,*
*வேலுடையார் வீடு,*
*அத்துரு அம்மன் கோயிலடி,*
*பெரிய தோட்டம், கரவெட்டி மத்தி.*

(சி-39420) (11-18-32)

தகவல்:
குடும்பத்தினர்.
*T.P 226 3709, 226 3747, 0776204705.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மேந்திராவை விடுவிப்பதற்கு மகேஸ்வரன் முயற்சி எடுக்கிறார்

கொழும்பு.டிச.1

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இலங்கையைச் சேர்ந்த சாரதியான தர்மேந்திராவை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஈடுபட்டுள்ளார் . இதற்காக இந்த வார இறுதியில் அவர் லெபனான் செல்லவுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக்கொண்டு வருவதற்கான அறிவித்தலையும் அவர் சபாநாயகரிடம் வழங்கியுள்ளார்.

தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட தர்மேந்திராவை விடுவிப்பதற்காக அரசு மேற்கொண்ட முயற்சிகள் எவையும் இதுவரை வெற்றிபெறவில்லை. இதனையடுத்தே இந்த முயற்சியில் மகேஸ்வரன் எம்.பி.ஈடுபடவுள்ளார்.

லெபனான், கட்டார், குவைத் ஆகிய நாடுகளுக்குச் சென்று தர்மேந்திராவை விடுவிப்பதற்கான நேரடி முயற்சிகளில் அவர் ஈடுபடுவார். குவைத்தில் தர்மேந்திரா பணியாற்றிய நிறுவனத்தின் பணிப்பாளரைச் சந்தித்து நிலைமைகள் குறித்தும் தான் ஆராயவுள்ளார் என்றும் அவர் நேற்றிரவு தெரிவித்தார்.

தன்னுடன் முஸ்லிம் எம்.பி. ஒருவரையும் முன்னாள் முஸ்லிம் எம்.பி. ஒருவரையும் இந்த முயற்சிக்குத் துணையாக அழைத்துச் செல்லத்திட்டமிட்டுள்ளார் என்றும் அவர் கூறினார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ராவூப் ஹக்கீமை அழைத்துச் செல்வது குறித்து தான் பேசிவருகிறார் என்றும் அவர் சொன்னார்.

இந்த விடயம் குறித்து வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருடன் நேற்று நண்பகலில் நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து அவர் பேசினார். மகேஸ்வரனும் முஸ்லிம் எம்.பிக்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறு வெளிவிவகார அமைச்சர் தனது செயலாளருக்கு உடனடியாக உத்தரவிட்டார்.

லெபனான் , கட்டார் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் மகேஸ்வரன் எம்.பி.அங்குள்ள ஊடகங்கள் மூலம் தர்மேந்திராவை விடுவிக்குமாறு தீவிரவாதிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்போகிறார் என்றும் கூறினார். அதே சமயம் அண்மையில் ஐ.நாவில் உரையாற்றும் போது ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறவேண்டும் என்று தான் நிகழ்த்திய உரையினை அங்குள்ள தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதற்கும் அவர் முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நாடுகளில் உள்ள இஸ்லாமிய மதத் தலைவர்களைச் சந்தித்து நேரடியாகப் பேசி தர்மேந்திராவின் விடுதலைக்கு முயற்சிக்கப் போகின்றார் என்றும் மகேஸ்வரன் எம்.பி. கூறினார்.

லெபனானுக்குப் புறப்படும் முன்னர் இன்று தர்மேந்திராவின் குடும்பத்தினரை நேரில் சந்தித்துப் பேசுவதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார்.

(க)

## ஐ.தே.கட்சியின் செயற்குழு நாளை கொழும்பில் கூடுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நாளை வியாழக்கிழமை கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெறவிருக்கிறது.

சமாதான முயற்சிகள் தொடர்பில் அரசிற்கு அளித்துவரும் ஆதரவைத் தொடர்வதா, இல்லையா என்பது பற்றிய இறுதியானதும்- உறுதியானதுமான தீர்மானம் இந்தக் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்படுமென ஐ.தே.க. பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்குச் சென்ற ரோஹித போகொல்லாகம மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்தும் இங்கு விவாதிக்கப்பட இருக்கிறது.

## பிரபாவின் கேள்விக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுத் தொடர்பில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது உரையில், சில விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். இப்போது அது தொடர்பான அரசின் பிரதி பலிப்பு, பேச்சுக்கான அரசின் கொள்கை என்ன என்பது பற்றிய பதிலே தேவையாக இருக்கிறது.

அன்று - 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி - புலிகள் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை களைச் சமர்ப்பித்தபோது அப்போதைய எமது அரசு 2003 நவம்பர் முதலாம் திகதி உறுதியான நிலைப்பாட்டை அறிவித்தது. நாம் எமது பொறுப்பைத் தட்டிக்கழிக்கவில்லை.

எனவே, இப்போது அரசு உறுதியான தீர்மானத்தை எடுக்கவேண்டும். ஜனாதிபதி குமாரதுங்கவின் கொள்கையின்படியா அல் லது ஜே.வி.பியினரின் கொள்கையின்படியா பேச்சுக்களை முன்னெடுப்பது என்பதுபற்றி அரசு தீர்மானிக்க வேண்டும்.

அன்று நாம் ஆட்சியிலிருந்தபோது எதிர்க்கட்சியாக இருந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எமது முயற்சிகளுக்கு இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அதிக இடையூறுகளை ஏற்படுத்தியது. அன்று உடனடியாகப் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றார். அன்று பொறுப்பற்று எதிர்க்கட்சி நடந்து கொண்டதுபோல் இன்று நாம் நடந்துகொள்ள முயற்சிக்கவில்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளைப் புலிகள் எம்மிடம் முன்வைத்தபோது அந்த யோசனைகளுடன் எமது யோசனைகளையும் சேர்த்து ஆராய்வதற்கு நாம் தீர்மானித்தோம். அவர்களின் யோசனைகளை நாம் நிராகரிக்கவில்லை. இன்று நாம் எதிர்க்கட்சியினராக இருந் தாலும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், எமது ஒத்துழைப்பைப் பெறுவதில் அக்கறை செலுத்தாமல் எமது கட்சியைச் சீர்குலைப் பதிலேயே அரசு கூடுதலாகக் கவனம் செலுத்துகின்றது.

அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பேணும்வகையில் - அதிகாரப் பரவலாக்கல் மூலமான - சமஷ்டி முறையிலான - அரசியல் தீர்விற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கிறது.

சமஷ்டி முறைமைகள் நாட்டுக்கு நாடு வித்தியாசப்படலாம். அவற்றையெல்லாம் பேச்சு மேசையில் ஆராயவேண்டும். எனவே, பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.- என்றார் பேராசிரியர் பீரிஸ்.

(எ-க)

## கொக்குவிலிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டு, கத்திவெட்டுக்கிலக்காகிப் படுகாய மடைந்தார்.

இச்சம்பவத்தில் திருநெல்வேலிப் பகுதியில் பலசரக்குக் கடை வைத்திருக்கும் கே.ரகுமார் (வயது -40) என்பவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை - நேற்று மாலை 6.30 மணியளவில் கொக்குவில், தலையாளிப் பகுதியில் இடம்பெற்றமோதல் சம்பவமொன்றில் இரு இளைஞர்கள் கத்திக் குத்துக்கு இலக்காகிப் படு காயமடைந்தனர்.

கொக்குவில் புதிதியைச் சேர்ந்த சூரிய காந்தன் முகுந்தன் (வயது-19), பரராஜசிங்கம் ஆதவன் (வயது -20) ஆகியோரே படு காயமடைந்தவர்களாவர். இச்சம்பவங்களையடுத்து தலையாளிப் பகுதியில் நேற்றிரவு பதற்றம் நிலவியது.

(எ-12-13)

## குருநகர் கோஷ்டிமோதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

### மக்கள் இடம்பெயர்வு

இதற்கிடையில், மேற்படி மோதல் சம்பவங்களால் பீதியடைந்த திருநகர்ப்பகுதி மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு அயலில் உள்ள கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை, சுண்டுக்குளி, சின்னக்கடை ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்தனர்.

நிலைமை மோசமடைந்ததை அடுத்து, நேற்றிரவு 7 மணிமுதல் இன்று காலை 6 மணிவரை குருநகர், திருநகர் ஆகிய பகுதிகளில் இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான அறிவித்தலை படையினர் நேற்றுமாலை ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

### நேற்றிரவும் வாள்வெட்டு

இதேவேளை, நேற்றிரவு 10.30 மணியளவில் குருநகரில் உள்ள தனது வீட்டுக்குச் சென்ற குருநகர் இராஜேந்திரா வீதியைச் சேர்ந்த பிரான்சிஸ் மெய்யழகன் (வயது-38) என்பவர் தலையிலும், கையிலும் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

யாழ். மத்திய கல்லூரியில் பணிபுரியும் இவர், கடமை முடிந்து வீடு திரும்புகையில் வாள்வெட்டுக்கு இலக்கானார் என்று கூறப்பட்டது. இவரும் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-5-7-12-13-15-17-30-51-88)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட, உஉஆவது படைப் பிரிவு அதிகாரி மேஜர் ஜெனரல் எஸ்.குலத்துங்க, குறுப் கப்டன், புளத்சிங்கள, கிழக்கு மாகாண தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்ல வாராச்சி, எஸ்.எஸ்.பி. உபாலி ஹேவகே உள்ளிட்ட படைத்தரப்பு அதிகாரிகள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதேவேளை,போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் சார்பில் மாவட்ட தலைமை அலுவலர் டக்பின் அட்நாஎனெஸ், கடற்கண் காணிப்புக் குழுத் தலைமை அலுவலர் ஜான் சஜோலின் ஆகியோரும், சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் சார்பில் பற்றிக் வோல்டரும் (Patrick Walder) கலந்துகொண்டனர்.

வருகைதந்த பிரதிநிதிகள் தமது தரப் புப் பிரச்சினைகள் குறித்துக் கருத்துத் தெரிவித்தனர். இத்தகைய சந்திப்புக்களும், கலந்துரையாடல்களும் அடிக்கடி இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்தனர்.

நிகழ்வில் படைகளின் சிரேஷ்ட அதிகாரி தயா சந்தகிரி தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

மனிதர்களாகப் பிறப்பது அரிது. அவ்வாறு பிறந்தவனுக்கு பகுத்தறிவு கொடுத்தது சிந்தித்து நல்லது, கெட்டது அறிந்து செயற்படுவதற்கு. மாறாக, போட்டி போட்டுக் கொண்டு பிணக்குகளை ஏற்படுத்தவல்ல உலகத்தில் எந்த மனிதனும் பரிபூரணமானவன் அல்லன். எனினும், சந்திக்கும் ஆற்றலும், மனிதாபிமானமும் அனைவரிடமும் இருக்கவேண்டும். தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு இடங்கொடுத்து நடக்கக் கூடாது. இங்கு மூவினத்தவரும் வசிக்கின்றனர். இவர்கள் ஐக்கியப்பட்டு வாழ வேண்டும் என்றார்.

## திருமலையில் பதற்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகப் பரீட்சை மாகாணக் கல்வி அமைச்சில் நேற்று ஆரம்பமாகியது.

இதேவேளை, நேற்று முன்தினம் திருமலையில் நடந்த அசம்பாவிதங்களின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் வாதியான ஈழத்து நாதனின் உப்புவெளியில் உள்ள வீடு தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.(எ-க)


**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2005**

புலமைப்பரிசில் திட்டம் 2005 ற்கான விண்ணப்ப முடிவு திகதி அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 15.12.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


### பிற்போடப்பட்டுள்ளது

கட்டப்பிராயைச் சேர்ந்த மார்க்கண்டு பாலசுந்தரம் என்பவருடைய இறுதிக் கிரியைகள் நாளை (02.12.2004) வியாழக் கிழமை நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

14 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய இவரது மரண அறிவித்தலில் இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை நடைபெறும் என அச்சாகியுள்ளது.

திருமதி பா.சரோஜினிதேவி (மனைவி), பிள்ளைகள்.
கோப்பாய் தெற்கு. (C-39422)


MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

**இலவசக்கணனிப்பயிற்சி**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 03/12/2004 இற்கு முன் நேரில்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி வேதாரணியம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வேதாரணியம் அவர்கள் 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சிவலிங்கம் வேதாரணியம் (யோகாஸ் பெரியண்ணை) அவர்களின் அன்பு மனைவியும் சிவதக்சினி (London), சுவேந்திரணி (Canada), சிவாஜினி (யாழ்.பல்கலைக் கழகம் நிதிக்கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரன் (London), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமிர்ற, அனிர்றா (London), கஜனி (Canada) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் -சரஸ்வதி தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சிவலிங்கம் - பொன்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும் திருமதி புஸ்பவதி வாமதேவன் (உரும்பிராய்), காலஞ்சென்ற திருமதி திலகவதி நாகராசா மற்றும் திருமதி குகனேஸ்வரி சிறீஸ்கந்தராசா (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம் (லிங்கம் Bakehouse), சண்முகலிங்கம் (ஆஸ்திரேலியா), திருமதி ஞானேஸ்வரி சரவணபவன் (Canada), திருமதி யோகேஸ்வரி சிவபாதநாதன் (Canada) ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2004) வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"யோகாஸ்"
333, நாவலர் வீதி,
கைலாசபிள்ளையார் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 222 7483

தகவல்:
சி.வேதாரணியம் (கணவர்)
(பெரியண்ணை).

(C-39415)(38-11-18)

### கனகசபை சிவனேசன் (சிவனேசபிள்ளை)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிவனேசன் (சிவனேசபிள்ளை - ஆங்கில ஆசிரியர்) நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் மகனும் கமலாசினி (பகவதி சரவணயின்) அன்புக் கணவரும் கலைவாணி (நோர்வே), பாலமுருகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேம நாதனின் (நோர்வே) மாமனாரும் கரிசனின் பேரனும் நாகேஸ்வரியின் சகோதரனும் பரமேஸ்வரியின் (தவம்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2004) புதன்கிழமை பி.ப.4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சம்பியன் லேன்,
விதானையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
மகன்
சி.பாலமுருகன்.

(39157)(3811-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் ... வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.12.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.